
665

# பொன்னி

PONNI • 10-4-52 • 4 அணா •



665
2-52



" என்னைப்பார்,
என் உடையைப் பார்,
என் அழகைப் பார் "

— குமாரியில் மாதுரிதேவி



" அண்ணனுக்குத் தலைவாரும் தங்கை "
— கல்யாணம் பண்ணிப்பார் என்ற படத்தில் ஒரு சுவையான கட்டம்



எவ்வளவு

# தென்பு

ஊட்டுகிறது!

பொது மக்களின் தேர்தல்படி சிறப்புக்கு காரணங்கள்:

★ டாடா தயாரிப்பு!

★ சுத்தமான தாவர எண்ணெய்களிலிருந்து உண்டாக்கப்படுகிறது!

★ இனிய நறுமணம்!

★ செழிப்பான நுரை!

ஆதலால்தான்

# ஹமாம்




ஒவ்வொருவருடைய பிரியமிக்க சோப்பாக விளங்குகிறது

சிறிய சைஸ் கட்டிகள் எங்கும் கிடைக்கும்.

டாம்கோ சேல்ஸ் டிபார்ட்மெண்ட், கோயமுத்தூர்

# பெரிய மனிதரும் - - சின்னப் பதவியும்

சென்னை அரசியல் நெருக்கடி மேலும் மேலும் தீராத சிக்கலாகி வருகிறது. ஆச்சாரியாரைச் சட்டசபைக் காங்கிரஸ் கட்சி தலைவராகத் தேர்ந்தெடுத்த பின்னரும் அச்சிக்கல் எதிர்பார்த்தபடி தீரவில்லை; முற்றியிருக்கிறது. சென்னைக்கு வந்திருக்கும் கவர்னர் ஸ்ரீபிரகாசா நடுநிலையாளராக நடந்துகொள்ள வேண்டுமென நாம் முன்பே விருப்பம் தெரிவித்திருந்தோம். அதற்கு மாறாக அவர் காங்கிரஸ் கட்சிக்கு மட்டுமே தம்மைக் கவர்னராகக் கருதுபவர்போல் நடந்துகொண்டு சிக்கலை வளர்த்துவருகிறார். ஆச்சாரியாரைக் காங்கிரஸ் கட்சி தலைவராகத் தேர்ந்தெடுக்கு முன்பே, ஐக்கிய ஜனநாயக முன்னணி தோழர் பிரகாசத்தைத் தலைவராகத் தேர்ந்தெடுத்துவிட்டது; பிரகாசம் கவர்னருக்குத் தம் கட்சியின் பலம் 166 என்று குறிப்பிட்டுக் கடிதமும் அனுப்பிவிட்டார். அந்தக் கடிதத்தை மேசைமீது வைத்துக்கொண்டே, டில்லி காங்கிரஸ் மேலிடமும் சென்னை காங்கிரஸ் வட்டாரமும் செய்த கூட்டுச் சதிக்கு உதவும் முறையில் ஸ்ரீபிரகாசா விசித்திர விளக்கம் தந்து பிரகாசம் கோரிக்கையை நிராகரித்திருக்கிறார். அத்துடன் அவர் நின்றிருந்தாலும் பரவாயில்லை. ஆச்சாரியாரை, அவர் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு ஒருமணி நேரத்திற்கு முன்பு சென்னை மேல்சபைக்கு நியமனம் செய்தார். காங்கிரஸ் கட்சி தலைவரைத் தேர்ந்தெடுத்ததுதான் தாமதம், ஸ்ரீபிரகாசா, காத்திருந்தவர்போல ஆச்சாரி யாரை அழைத்துப் பேசினார்; காங்கிரஸ் கட்சியின் பலமென்ன என்றுகூடக் கவனியாமல் மந்திரிசபை அமைக்கும்படி அவரைக் கேட்டுக்கொண்டிருக்கிறார். ஆச்சாரியாரும் மந்திரி சபைக்கு ஆள் தேடும் பொறுப்பில் ஈடுபட்டிருக்கிறார்; இனி எந்த நிமிஷத்திலும் சென்னையில் காங்கிரஸ் மந்திரிசபை ஏற்பட்டுவிடலாம்.

இந்நிலையில் சென்னை ராஜ்ய மெங்கும் காங்கிரஸ் மந்திரி சபை அமைப்பதை எதிர்த்துக் கண்டனக் கூட்டங்கள் நிகழ்ந் திருக்கின்றன. கவர்னரின் விசித் திரப் போக்கைக் கண்டித்துத் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட் டிருக்கின்றன. ஐக்கிய ஜன நாயக முன்னணியின் தலைவரை கவர்னர் மந்திரிசபை அமைக்க அழைக்க வேண்டுமென நாடெங்கும் மக்கள் கோருகின் றனர்.

இக்கோரிக்கைகள் பயன்படு மென்றோ கவர்னரின் காதில் விழுமென்றோ நாம் கருத வில்லை. 'எப்படியும் காங்கிரஸ் மந்திரிசபையை ஏற்படுத்தி விடுவது' என்ற உறுதியில் செயற்படும் கவர்னரின் எண் ணம் எப்படி உருக்குலைய முடியும்? பொதுத் தேர்தலில் வீழ்ச்சிபெற்ற காங்கிரஸ் புத் துயிர் பெறுவதற்கு வழி இது வல்ல என்று காங்கிரஸ் நண்பர் களுக்குக் கூற விரும்புகிறோம். தங்கள் கட்சி மைனாரிட்டி யாகிவிட்ட நிலையிலும் அதி காரத்தை விட மனமில்லாதவர் களாகக் காட்டிக்கொள்வது காங் கிரஸுக்கு மக்கள் ஆதரவை வளர்க்க உதவுமா? ஆச்சாரி யார் அசெம்பிளிக்குத் தம்மைத் தேர்ந்தெடுத்துக் கொள்ள வேண்டுமென்று நேரு குறிப்புக் காட்டியும், அதை மீறிக் கவர் னரைக் கட்டாயப்படுத்தி மேல் சபைக்கு ஆச்சாரியாரை நிய மனம் செய்யவைத்தது மக்கள் மன்றத்திலே காங்கிரஸ் கட்சிக்கு புத்துயிர்தரப் பயன்படுமா? சென்ற சில வாரங்களாக நடந்து முடிந்திருக்கிற நிகழ்ச்சிகள் சென்னை காங்கிரஸ் கட்சியின் அழிவை யாரும் தடுத்து நிறுத்த முடியாது என்று தெளிவாகக் காட்டிவிட்டன. காங்கிரஸின் அழிவை நாட்டு முன்னேற்றத் தில் கருத்துள்ள யார்தான் விரும் பாமல் இருக்க முடியும்? ஆனால் அதைப்பற்றியல்ல நம் கவலை. சென்னைக்கு ஓய்வெடுத்துக் கொள்ள வந்திருந்த ஆச்சாரி யார் சென்னை அரசியலில் மீண்டும் பிரவேசித்திருக்கிறாரே அந்நிலை கண்டுதான் நாம் பரி தாபப்படுகிறோம். ஆச்சாரியார் நாட்டிற்காகத் தொண்டாற்றிய பெரியவர்களிலே முக்கிய மானவர். அபாரமூளை படைத் தவர். திறமையின் உருவமாக விளங்குபவர். சாணக்கிய தந் திரம் அவர் பரம்பரைக் குணம். இந்தியாவில் மிகப் பெரிய பதவி யான கவர்னர்—ஜெனரல் பதவி வரை வகித்து முடித்துவிட் டவர். சென்னை முதலமைச்சரா யிருந்தார். மேற்கு வங்க கவர்ன ரானார்; கடைசி கவர்னர்-ஜெனர லாக விளங்கினார்; இறுதியாக நேரு சர்க்காரின் உள்நாட்டு அமைச்சராகப் பணியாற்றி விட்டு முதுமையை ஓய்வாகக் கழிக்கச் சென்னை வந்து சேர்ந் தார். அரசியல் குட்டையில் அவர் மீண்டும் விழுவாரென யாரும் எதிர்பாராத நிலையில் அவர் சென்னை ஆட்சிப் பொறுப்பை ஏற்க முன்வந்திருக் கிறார். பெரிய மனிதர்தான்!

ஆனால் சந்தர்ப்பம் அவரைச் சின்னப் பதவியில் தள்ளியிருக்கிறது! சென்னை முதலமைச்சர் பதவி சின்னப் பதவி அல்ல; பெருமைமிக்க பதவிதான்! ஆனால் ஆச்சாரியாரை நோக்க, கவர்னர்-ஜெனரலாக விளங்கிய ஆச்சாரியாரை நோக்க, 'அரசியல் வாழ்க்கை போதும்; பரமார்த்திகத் துறையில் இன்பம் காண்போம்' என்று முடிவுகட்டிவிட்ட ஆச்சாரியாரை நோக்க சென்னை முதலமைச்சர் பதவி கேவலம் சாதாரணமானதுதானே! 'கல்கி' ஏடு குறிப்பிட்டது போல ரமணரிஷியை முனிசிபல் கமிஷனர் வேலைக்கு அழைப்பது போன்ற நிலைதானே இது! மேலும் காங்கிரஸ் தட்டிக்கேட்க ஆளில்லாத நிலையில் வெற்றிமுரசு கொட்டிய நிலையிலா தலைமையை ஆச்சாரியாருக்கு வழங்கியிருக்கிறது! அவரே குறிப்பிடுவது போல 'மெலிந்த நிலையில்' தானே அவரை அழைத்திருக்கிறது!

சென்னையைப் பொறுத்தவரையில் ஆச்சாரியாரின் பொது வாழ்க்கை பல கசப்பான கட்டங்களை உள்ளடக்கியே வந்திருக்கிறது. உலக ரீதியில் அகில இந்திய ரீதியில் ஆச்சாரியாரின் மேதை ஒளிவீசிய தென்பதில் ஐயமில்லை. ஆனால் சென்னை மக்களிடையே அவர் எந்த நாளிலும் செல்வாக்குப் பெற்றதில்லை. இந்தியைக் கட்டாயமாக்கி அவர் வளர்த்த அடக்குமுறையை யாரும் மறக்கமாட்டார்கள். மறக்க நினைத்தவர்களையும் மீண்டும் நினைத்துக்கொள்ளும்படி செய்திருக்கிறது ஆச்சாரியாரின் அரசியல் பிரவேசம்! அவருடைய சொந்த நலனில் அக்கரையுள்ளவர்களும் இந்தப் பிரவேசத்தை வரவேற்கமாட்டார்கள்; காங்கிரஸ் கட்சி நலனில் விருப்புள்ளவர்களும் இந்த மாறுதலை ஏற்கமாட்டார்கள்; சென்னை மக்கள் நலனில் கருத்துள்ள யாரும் ஆச்சாரியாரின் புதுக்கோலத்தை ஆதரிக்கமாட்டார்கள். இத்தகைய சூழலில் ஆச்சாரியார் வந்திருக்கிறார். பெரிய மனிதர்! ஆசையை அடக்க வழியறியாமல் அற்பப் பொறியில் சிக்கிக்கொண்டுவிட்டார்! பரிதாபப்படுகிறோம்! சென்னையின் நல்வாழ்வு ஆச்சாரியார் வரவால் சிதைவது குறித்துக் கவலைப்படுகிறோம்.


## புதுமைப்பித்தன் சிறுகதைப் பரிசு!

## பரிசு ரூ. 250

'பொன்னி' அறிவிக்கும் முதல் சிறுகதைப் போட்டி

[முழு விவரங்களுக்கு 10–3–52 இதழைப் பார்க்கவும்]

# ஆடும் மாடும்

டி.கே.சீனிவாசன்



## பதினான்காவது அத்தியாயம்

அந்தக் கடிதத்தை மறுபடியும் படிக்கவேண்டும் என்ற ஆவல் என்னவோ சோமுவுக்கு எழத்தான் செய்தது; ஆனால் ஏனோ தெரியவில்லை, படிக்காமலே தனக்கு ஏற்பட்ட அந்த ஆவலைப்பற்றி மட்டும் சிந்தித்தான். அலுத்துக் களைத்து ஆலையிலிருந்து வெளிப்படும் தொழிலாளி வீட்டு வாயிலில் நின்று தன்னை எதிர்நோக்கிக் காத்திருக்கும் தன் குழந்தையைப் பார்ப்பதுபோல அதைப் பார்த்தான். 'ஆசையின் சிறுசிறு ரேகைகள் தம் சாயலைக் காட்டிக்கொண்டன; ஆனால் அவை முழுமை அடையாதபடி.'' சோர்வும் சலிப்பும் அவனோடு போராடின. அவனுடைய நெஞ்சில் இருந்த ஈரத்தையெல்லாம் வாழ்க்கை உண்டாக்கிய நெருப்பு ஆவியாக்கி அகற்றி விட்டது. எதையோ எதிர்பார்த்து, அதற்காக எல்லாவற்றையுமே இழந்துவிட்ட அந்தத் துர்ப்பாக்கியனுக்குக் கலைநோக்குடனே, காதல் கண்களுடனே எதையும் கவனிக்க முடியவில்லை! மங்கி மறைந்துபோன மனிதப் பண்புகளைப்பற்றி அவனால் நினைக்கத்தான் முடிந்தது. அவைகளை இழந்துவிட்டோமே என்ற வருத்தமோ, திரும்பப் பெறவேண்டும் என்ற வேட்கையோ அவனிடம் உண்டாகவில்லை. தன்னை வஞ்சித்தவர்களைப் பழிக்குப் பழி வாங்கவேண்டும் என்ற எண்ணத்தைத் தவிர வேறெதற்கும் இடங்கொடுக்கச் சோமுவுக்கு மனம் வரவில்லை.

அந்த அறை முழுவதையும் ஒருமுறை பார்த்தான். தூய்மை என்ற சொல் தன் முழு மதிப்பையும் பெற்று விளங்கிற்று அங்கே. பழக் கடைக்காரன் தன் கனிகள்

கெட்டுவிடாமல் பாதுகாப்பது போல அங்கிருந்த ஒவ்வொன்றும் காக்கப்பட்டிருந்தன. தேவைக்கு என்று தேர்ந்தெடுக்கப்பட்டதைப்போன்ற பொருள்களே தென்பட்டன. ஒவ்வொன்றும் அதற்குரிய இடத்திலேயே இருந்தது. போற்றிப் பாதுகாக்கும் பண்பு படைத்த ஒருத்தியின் ஆதிக்கத்தில் இருந்ததால் ஒவ்வொரு பொருளும் பொலிவோடு விளங்கிற்று. சோமுவின் உள்ளத்தில் ஒரு பெருங்காற்று எழுந்து அங்கிருந்த குப்பை கூளங்களையெல்லாம் வாரியெடுத்துச் செல்லுவதைப் போன்ற உணர்ச்சி அவனுக்கு ஏற்பட்டது. தன்னிடத்தில் உண்டான மாறுதலுக்கு என்ன காரணம் என்பது புரியாமல் தடுமாறிய அவனுக்கு மட்டும், வாதப்பிரதிவாதங்களை விட வாழ்ந்து காட்டுவதால் மனிதன் தன்னையறியாமலே சீர்திருத்துகிறான் என்ற உண்மை மட்டும் தெரிய நேர்ந்தால்...

அந்தக் கடிதத்தை மறுபடியும் பிரித்துப் படிக்கத் தொடங்கினான். பிள்ளைகள் பல பெற்று அதனால் தொல்லை அடைந்தவன் தான் சிறுவயதில் விளையாடிய பொம்மையின் உடைந்த துண்டுகளைப் பார்ப்பதுபோல் இருந்தது அவனுக்கு. ஆனால் அந்தக் கடிதத்தில் அவனையறியாமலே அவன் ஆழ்ந்துவிட்டபோது, முன்னைப்போல வெள்ளைக் காகிதத்தில் எள்ளைக் கொட்டியது போலச் சலனமில்லாமல் அந்த எழுத்துக்கள் காணப்படவில்லை. ஒவ்வொரு சொல்லும் உயிர் பெற்று உலவத் தொடங்கியது. கடிதம் முழுதும் கட்டெறும்புகள் கூட்டம் கூட்டமாக "சோமு எங்கே? எங்கே?" என்று தேடியலைவதுபோலத் தோன்றிற்று. தவறி அவற்றில் ஏதாவது தன்னைக் கடித்துவிட்டால் என்ன செய்வது என்ற பயத்தால் அந்தக் கடிதத்தைக் கைநழுவ விட்டான்.

தட்டில் தோசைகளை அடுக்கி எடுத்துக்கொண்டு சமையலறையிலிருந்து வெளிப்பட்டாள் பத்மா. வானவிளிம்பிலிருந்து எழுந்துவரும் வட்ட நிலவைப்போல அவனை நோக்கி வந்துகொண்டிருக்கும் அவளையே பார்த்தான். ஏதோ ஒருவித மாறுதல் அவளை எவராயிருந்தாலும் மதிக்கும் அளவுக்கு மாற்றியிருந்தது.

"பத்மா! நீ இன்னும் என்னைக் காதலிக்கிறாயா?"

நேரிடையான இந்தக் கேள்வி பத்மாவைத் தடுமாறச் செய்துவிட்டது; நிமிர்ந்து சோமுவைப் பார்த்தாள். அவன் முகத்தில் படிந்திருந்தது சந்தேகமா அல்லது சஞ்சலமா என்பதை அவளால் நிதானிக்க முடியவில்லை.

"இதில் சந்தேகப்பட என்ன இருக்கிறது, சோமு? காதல் ஒன்றுதானே எந்தவித ரசாயன மாறுதல் ஏற்பட்டாலும் கரையாத பொருள்!" என்றாள்.

"இல்லை. இன்னுமா உனக்கு என்னைக் காதலிக்க மனம் வருகிறது?"

"பொதுவாகவே ஆண்களுக்கு இருக்கிற அலட்சிய புத்தி பெண்களுக்கு ஏற்பட முடிவதில்லை, சோமு. எத்தனையோ நிகழ்ச்சிகளில் சிக்கி உரமேறிவிடும் ஆணின் உள்ளம் எளிதில் எதையும் தள்ளிவிடும். ஆனால் மென்மையாகவே இருக்கும் பெண் உள்ளத்தால் அப்படி நடக்கவே முடியாது. சோமு... ஒரு பெண் தன் காதலுக்காகத் தான் காதலித்த ஆணை வேண்டுமானால் கொல்லத் துணிவாளே தவிர, தன்காதலைக் கொல்ல அவளால் முடியாது!"



"பத்மா...."

பயம் தன்னைத்தானே காட்டிக்கொண்டது சோமுவின் குரலில்.

"உங்களை மட்டுமல்ல, சோமு, இந்த உலகத்தில் உள்ள உதவாக்கரைகள் அத்தனை பேரையும் கைகழுவிவிடாமல் காதலித்துக் கரையேற்ற வேண்டும் என்றுதானே அறிவியக்கம் நமக்குக் கற்றுக் கொடுத்திருக்கிறது."

இந்தச் சொற்கள் சோமுவிடம் ஏதோ ஒருவித மாறுதலை ஏற்படுத்திவிட்டன. உள்ளத்தில் ஏற்பட்ட அதிர்ச்சி உடலையும் தாக்கத் தொடங்கிற்று. நாலைந்து நாட்களாகச் சோறும் நீரும் சரிவாக் கிடைக்காமல் சுற்றியலைந்ததால் சோர்வு மெல்ல மெல்ல அவனிடம் தலைகாட்டத் தொடங்கியது. அவன் உடல் தளர்ந்து காணப்பட்டது; நரம்புகள் கட்டுவிட்டுப் போயிருந்தன. எலும்புகள்கூட வளைந்து நெளிவதைப் போன்ற உணர்ச்சி அவனிடம் உண்டானது. ஒன்றுக்கொன்று தொடர்பில்லாத, ஆனால் தொல்லையைத் துளிர்க்கச் செய்யும் எண்ணங்கள் பல அவனிடம் ஏற்பட்டன.

பத்மாவைக் கூர்ந்து கவனித்தான். அவள் கையில்காணப்பட்ட தட்டு கூரிய வாளைப் போலக்காணப்பட்டது. சுற்றிலும் அவன் பார்வை பாய்ந்தது. விளக்கொளி பட்டதால் எல்லாப் பொருள்களின் நிழல்களும் சுவரிலும், தரையிலும் படிந்திருந்தன. நீண்டும் குறுகியும் காணப்பட்ட அந்த நிழல்கள்...! ஒவ்வொரு பொருளும் தன்னையொத்த இன்னொன்றைத் தனக்குள் ஒளித்து வைத்திருப்பதைப் போலத் தோன்றிற்று. ஒளிபட்டதும் அவற்றின் உண்மைநிலை தெரிந்திருக்கிறது. இந்த பத்மா...! தான் செய்த எத்தனையோ கொடுமைகளை இவ்வளவு விரைவில் மறந்துவிட இவளால் எப்படி முடிகிறது? கொதிப்போ, குமுறலோ இல்

லாமல் தன்னிடம் குளிர்ந்த முகத்தோடு இவள் பேசுவதும் நடந்துகொள்ளுவதும்......சிரித்துப் பேசிச் சித்திரவதைக்கு உள்ளாக்கும் பெண்களைப்பற்றிச் சிறுவயதில் நிறையக் கேட்டிருக்கிறான். இன்று அவனிடத்திலும் அதே போல ஒரு பெண்...தன்னந்தனியாகவா அந்த வீட்டில் அவள் இருந்திருக்க முடியும்? வேறு யாரோ அவளோடு இருக்கிறார்கள். இவன் கண்களில் படாமல் மறைந்திருக்கிற அந்த வஞ்சகன்...வலை விரிக்கிறான். இவள்—வலையில் அவன் சிக்கியவுடன் அந்த ஆள் அவனை...... பழிக்குப்பழி! சமையலறையைத் தவிர வேறெந்த அறையும் இல்லை அந்த வீட்டில். சற்று முன்புதான் சமையலறைக்குள் அவன் எட்டிப் பார்த்தான். ஆனால்...சந்தேகம் அப்போதே தோன்றாததால் சரியாக அதைக் கவனிக்கவில்லை! லேசாக நடுங்கிற்று சோமுவின் உள்ளம். ஆசைகளை நிறைவேற்றிக் கொள்ள அவன் அமைத்த திட்டங்கள் அத்தனையும் பொடிப் பொடியாகிச் சிதறுவதை அவனால் சகிக்கவே முடியவில்லை.

"என்னை மன்னித்துவிடு, பத்மா! நான் செய்தது அத்தனையும் தவறுதான். நான் மகா பாதகம் செய்துவிட்டேன்" என்று சொல்லும்போது சோமு அழுதுவிடுவான் போலிருந்தது.

"மன்னிப்பதாவது? நான் அவைகளையெல்லாம் மறந்தே விட்டேனே. நினைவில் இருந்தாலல்லவா, மாற்றுவதற்கும் மன்னிப்பதற்கும் முடியும்!"

இவள் ஒரு கல்நெஞ்சக்காரி என்பதைத் தவிர வேறெதுவும் தோன்றவில்லை சோமுவுக்கு. எப்படி நிலைமையைச் சமாளிக்கலாம் என்பது விளங்காமல் தத்தளித்தான்.

"சோமு! கால் கைகளைக் கழுவிக்கொண்டு வாருங்கள்; சாப்பிடலாம்" என்றாள் பத்மா.

"எனக்குப் பசியில்லை, பத்மா!" என்று பதிலளித்தான் சோமு.

எந்தப் பரிசோதனைக்கும் உட்படாமல் எத்தனையோ முரண்பாடான பண்புகளைக் காட்டும் அந்த ஆச்சரியமான மனிதனை வேடிக்கையாகப் பார்த்தாள் பத்மா. அவளுக்கு அவன்மேல் அளவுக்கு மீறிய அனுதாபம் இருந்தது. கணவனாக வேண்டிய தன் காதலன் தன் மடியில் தவழும் கைக்குழந்தையாக ஒரு காலத்தில் இருப்பான் என்று அவள் கனவிலும் நினைத்ததில்லை. என்ன இவனுக்கு நேர்ந்துவிட்டது என்பதை விளங்கிக்கொள்ள முடியவில்லை அவளுக்கு.

தோசைத் தட்டை மேஜைமேல் வைத்தாள்.

"உட்காருங்கள், சோமு" என்று நாற்காலியை அவன் அருகே இழுத்துப் போட்டாள்.

"சோமு, உங்கள் உடம்புக்கு ஏதாவது...?"

"ஒன்றுமில்லை, பத்மா! நன்றாகத்தான் இருக்கிறேன்."

தன்னைச் சுற்றிலும் ஏன் இருண்டு வருகிறது என்பது சோமுவுக்கு விளங்கவில்லை.

"விளக்கில் எண்ணெய் குறைவாக இருக்கிறதுபோல் இருக்கிறது, பத்மா. கொஞ்சம் ஊற்று."

பதறிவிட்டாள் பத்மா. ஒருவேளை மூளைக்கோளாறாக இருக்குமோ?

"இது மின்சார விளக்காயிற்றே, சோமு!" என்றாள்.

"பத்மா! என்னையே ஏன் உற்று நோக்குகிறாய்?" என்றான் சோமு.

ஒருவேளை குடித்துவிட்டு வந்திருப்பானோ என்ற சந்தேகம் தோன்றியது பத்மாவுக்கு. உறுதி செய்துகொள்ள அவனை நெருங்கினாள். தன்னை நோக்கி அவள் வருவது தெரிந்தது சோமுவுக்கு. மெல்லப் பின்வாங்கினான்.

"என்னைக் கொன்றுவிடாதே, பத்மா!" என்று அலறியே விட்டான்.

அப்போதுதான் பத்மாவுக்கு உண்மை விளங்கிற்று. உயிராசையால் ஆட்டிவைக்கப்படும் அவன் பரிதாப நிலைகண்டு கலங்கினாள்.

சோமுவுக்கு இன்னும் தெளிவு குறையவில்லை. பத்மா வருகிறாளா இல்லையா என்பதைக் கவனிக்காமலே அவன் பின்பக்கமாக நடந்துகொண்டிருந்தான். பேய்ப் பயம் பிடித்தவன் இருளில் தனிவழியே நடக்க நேரிட்டால், அவன் கால்களில் மிதிபடும் சருகுகளின் சலசலப்பைக் கேட்டே நடுங்குவதுபோல, அவன் எடுத்துவைக்கும் காலடிகளின் ஓசையே அவன் உள்ளத்தை நடுங்கவைத்தது.

"நான் செய்ததெல்லாம் தவறுதான். ஏதோ என் முட்டாள்தனத்தால் தவறிவிட்டேன். நான் பின்பற்றிய அறிவியக்கம் மனித ஜாதியின் நுணுக்கங்களையெல்லாம் எனக்குக் கற்றுக்கொடுத்தது. ஆனால் சமுதாய நலத்துக்கு அவற்றைப் பயன்படுத்தாமல் என் தனி நன்மைக்காகப் பயன்படுத்திவிட்டேன். நான் குற்றவாளிதான் ஆனால்....




"ஏது, உங்க வீட்டுக் குழாயிலே தண்ணீர் நிறைய வருது போலிருக்கே. குடம் குடமாக வெளியே போறதே"

"சரியாய்ப்போச்சு. பால்குடம் ஐயா அது"

பத்மா!...... தவறுக்கு நான் பொறுப்பாளியல்ல. என்னை வாட்டிவதைத்த வறுமைதான்... வறுமைக்குட்பட்டு வாடி வதங்கும் கோழையாக எனக்கு மனம் வரவில்லை. அதனால்தான் பத்மா...நான் வஞ்சகனானேன், நீ கூடவா எனக்குத் தண்டனையளிக்கத் துணிகிறாய்? பத்மா! என்னை விட்டுவிடு...எங்காவது ஓடித்தப்பித்துக்கொள்ளுகிறேன். என் விருப்பங்களையும் வேட்கைகளையும் நான் அனுபவித்துத் தணித்துக்கொள்ளுவதற்குமுன் என்னைக்கொன்றுவிடாதே"

பேசிக்கொண்டே பின்னால் நடந்துகொண்டிருந்தான் சோமு. அவனை நின்றபடியே கவனித்துக்கொண்டிருந்தாள் பத்மா. திடீரென்று சுவரில் அவன் முதுகு மோதியது. "ஐயோ!" என்று கூவிக்கொண்டே திரும்பினான். சுவரில் இருந்த அந்தப் படங்கள்... முதற்படம் கைக்குழந்தையைக் கையில் ஏந்திக்கொண்டு அதையே கனிவோடு பார்க்கும் கன்னிமேரி! தாய்மை விழிகளில் ஒளிவீசத் தன் சேயைப் பார்த்துக்கொண்டிருந்தாள் அவள். ஆனால் அடுத்த படம்...? தன்னைக் கட்டியணைத்துக்கொண்ட காதலியின் கழுத்தை நெறித்துக்கொண்டிருந்தான் அவள் காதலன். நிறங்குன்றி வரும் அவள் முகம்—பிடிப்பைத் தளர்த்தி விலகி நழுவும் கைகள்! வெறிதணியாது தன் வேலையிலேயே ஈடுபட்டிருந்தான் அந்த ஆண்.

யாரோ சோமுவைத் தூக்கி எங்கோ வெகு தூரத்தில் வீசியெறிவதைப் போலத் தோன்றிற்று. அடிபட்ட தலையை யாரோ தடவிக் கொடுத்தார்கள். மென்மையுள்ள தலையணை ஒன்று அவன் தலைக்குக் கீழ் கொடுக்கப்பட்டது. குளிர்ந்த நீரால் அவன் முகம் துடைத்துச் சுத்தப்படுத்தப்பட்டது.

"உங்களை நான் கொன்றுவிட மாட்டேன், சோமு. பயப்படாதீர்கள். எரிதழலாக என் இதயம் இருந்தபோது நீங்கள் எதிர்ப்பட்டிருந்தால், எரித்துத் தீய்த்திருப்பேன். இப்போது அணைந்து போன சாம்பல்தான் மிஞ்சியிருக்கிறது. அது அபாயந் தராத பொருள்! நீங்களே உங்களை அழித்துக்கொள்ளுவீர்கள். உங்கள் மனச்சாட்சியே உங்களை மாய்த்துவிடும். மனமாவது, சாட்சியாவது, அப்படி என்று ஒரு பொருள் எது என்று கேட்கிறீர்களா? விஞ்ஞானத்தின் கண்களுக்குப் புலப்படாவிட்டாலும் அதன் விளக்கத்துக்கு உட்பட்டதுதான் அது. நாம் பிறந்து வளரும்போது நமக்குக் கற்பிக்கப்படும் கருத்துக்கள்தாம் உள்ளம் என்ற பொருளை உருவாக்குகின்றன. தெம்பு குறையும் வரை நீங்கள் செய்யும் தீவினைகளுக்கு உங்களுடைய உள்ளமும் உட்பட்டுத்தான் இருக்கும். திடமிழந்து உடல் தேயத் தொடங்கும்போதுதான் உள்

ளம் உணர்வைப் பெறும். கொஞ் சங்கொஞ்சமாக—சிறுகச் சிறுக—அணுஅணுவாக உங்களே அரித்தும் தள்ளிவிடும், அப்போது உங்கள் மனசாட்சி. ஆகையால் என்னுல் உங்களுக்கு ஆபத்து ஏதுமில்லே. கொலேயைவிடத் தற்கொலேதான் கொடுமையானது என்பது எனக்குத் தெரியும்.''

கொட்டை கொட்டை எழுத்துக்களில் பார்வை எட்டும் அளவு தூரத்துக்கு இதே சொற்கள் காணப்பட்டன. ஆச்சரியத்தோடு அந்த எழுத்துக்களேயே பார்த்துக் கொண்டிருந்தான். பிறகு எழுந்து அந்தப் பெரிய பெரிய எழுத்துக்களேப் படிகளாகவும் ஏணிகளாகவும் ஆக்கிக்கொண்டு அவற்றின் மேல் ஏறியும் இறங்கியும் விளேயாடத் தொடங்கினுன்.

இரவு கரைந்து காணுமல் போய்க் கொண்டிருந்தது. ஒளி தலேகாட்டியது. பறவைகளின் கூச்சல் மட்டும் காதில் விழுந்தது பிறகு நேரம் ஆக ஆக, மனிதர்கள் நடமாடத் தொடங்கினர். பூபாளம் பாடவேண்டிய அந்த நேரத்தில் பெண்கள் தண்ணீர்க் குழாயில் இருந்துகொண்டு இசையை வசையாக்கிப் பொழிந்துகொண்டிருந்தனர். அடித்துப் போட்டதுபோல அயர்ந்துறங்கும் சோமுவை ஆச்சரியத்தோடும் அனுதாபத்தோடும் பார்த்துக்கொண்டு உட்கார்ந்திருந்தாள் பத்மா.

(தொடரும்)

## பரிசு முடிவு

25–3–52 மேலட்டையில் வெளிவந்த நிழற்படம் குறித்து எங்களுக்குக் கிடைத்த தலேப்புகளில் கீழ்க்கண்ட தலேப்பு ரூ. 5—பரிசு பெறுகிறது.

**சுரக்கும் நீரைச் சுமக்கும் சால்**

பரிசு பெற்றவர் :

ஆ. வெ. மிதிலா
அடுக்காம்பாரை கிராமம்
வட ஆற்காடு மாவட்டம்

மற்றும் **பாராட்டுக்குரிய** தலேப்புகளேக் கீழே தந்திருக்கிறோம்.

தலேப்பு :

**'கவலே' நிறைந்தது—**
**கவலே மறைந்தது**

சூ. சவரிநாதன், திருச்சி

தலேப்பு :

**நாடெங்கும் சீர்வளர்க்கும்**
**நல்லமுத நீர்க்கிண்ணம்**

எஸ். மீனு — நாகர்கோயில்

தலேப்பு :

**சிந்தியதுபோக எஞ்சியது போதும்**

வெ. கோபாலன்
பாணுவரம்

தலேப்பு :

**தண்ணீர் கொண்டுவாராயோ ?**
**—மக்கள்**
**கண்ணீர் துடைக்கமாட்டாயோ ?**

ஐ. சங்கரமணி—மதுரை

# வெறும்  கலாட்டா!

பஞ்சம்

பஞ்சத்தைப்பற்றி ஒரு கதை. அசல் கதைதான். வருஷம் மாதம், தேதி எல்லாம் ஞாபகம் இல்லை! சென்னை ராஜ்யத்தில் ஒரு ஜில்லாவில் இப்பொழுது ராயலசீமையில் பஞ்சம் வந்திருப்பது போலக் கொடிய பஞ்சம் வந்துவிட்டது. குடிக்கத் தண்ணீர் இல்லை. செய்ய வேலை இல்லை; சாப்பிட உணவு இல்லை; மனிதனுக்கு மட்டுமா இந்நிலை! மாடுகளுக்குத் தின்ன வைக்கோல் இல்லை; அவற்றைத் தின்ன மக்கள் காத்திருந்தனர். முன்ஷியின் அருமைப்பண்டங்களான பிண்ணாக்கு, புளியங்கொட்டை முதலியவைகளை மக்கள் 'வயிறார' உண்டு காலத்தை ஓட்டினர். அந்த ஜில்லாவைவிட்டு ஜனங்கள் வேறு ஜில்லாவுக்குக் கூட்டம் கூட்டமாக வெளியேறினார்கள். பத்திரிகை நிருபர்கள் சுற்றுப் பிரயாணம் செய்து பத்தி பத்தியாகச் செய்திகளை அனுப்பிக்கொண்டிருந்தார்கள். படங்களுடன் செய்திகள் வெளிவந்தன. பஞ்சம் பரவிய ஜில்லாவில் கலெக்டர் உத்தியோகம் பார்க்கும் திருவாளர் பத்திரிகைகளில் வந்த செய்திகளைப் பார்த்ததும் 'தம் ஜில்லாவில் பஞ்சமா?' என்று திடுக்கிட்டுப்போனார் அன்று சென்னை சர்க்கார் காரியாலயத்திலிருந்து 'அவசரம்' என்ற முத்திரைகுத்தி வந்திருந்த கடிதமும் பஞ்சத்தைப் பற்றி முழுத் தகவலையும் உடனே அறிவிக்கும்படி கேட்டது. கலெக்டர் பறந்தார். உணவு மந்திரி பஞ்சத்தால் பாதிக்கப்பட்டபகுதிகளைக் கலெக்டருடன் பார்வையிட்டார். கவர்னர் விசேஷ ரயிலில் வந்து ஜில்லா நிலைமையை ஆராய்ந்தார். பிரமுகர்கள் பத்திரிகைகளுக்கு அறிக்கை கொடுத்தார்கள். பஞ்சம் போக்கும் நிதியை நாலா பக்கமும் ஆரம்பித்தார்கள். ரோட்டுப் போடுவது, குளம் வெட்டுவது போன்ற வேலைகளை ஜில்லா முழுவதிலும் தொடங்கினார்கள். கஞ்சித்தொட்டிகளைக் கிராமந்தோறும் ஏற்படுத்திப் பசிக்கும் வயிறுகளுக்குக் கஞ்சி வார்த்தார்கள். இவ்வாறு பஞ்சத்தால் பிரபலமாகிவிட்ட ஜில்லாவைப் பார்வையிட வேண்டுமென்று சென்னை நகரில் வசிக்கும் ஒரு பிரபலமான நபருக்கு அளவுகடந்த ஆசை ஏற்பட்டுவிட்டது. பார்த்துவந்து பத்திரிகைகளில் ஒரு அறிக்கை கொடுக்காவிட்டால் அவருக்கு மன நிம்மதியே ஏற்படாது போலிருந்தது. புறப்பட்டார் தம்முடைய சொந்தக் காரில். தம்முடைய முக்கிய நண்பர்களுக்

செல்லாம் தாம் வருவதாகத் தந்தி கொடுத்தார். சென்னைப் பிரமுகரைப் பஞ்சத்தால் பாதிக்கப்பட்ட ஜில்லா வரவேற்றது. எங்குபோனாலும் வரவேற்புகள், உபசாரப்பத்திரங்கள், விருந்துகள், புகைப்படங்கள்! பிரமுகரின் நண்பர்கள் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கொண்டு சக்கைப்போடு போட்டுவிட்டார்கள். பவனியை வெற்றிகரமாக முடித்துக்கொண்டு சென்னை நகருக்கு வந்துசேர்ந்தார் பிரமுகர். அவர் வீட்டில் காத்துநின்ற நிருபர்களிடம் தாம் ஏற்கனவே டைப்செய்து வைத்திருந்த அறிக்கையைத் தந்துவிட்டுப் புன்முறுவலுடன் அவர்களுக்கு விடைகொடுத்தனுப்பினர். "பஞ்சத்தைப் போக்க விசேஷ அதிகாரி நியமிக்கவேண்டும். சென்னைப் பிரமுகரின் யோசனை" என்ற தலைப்பில் அறிக்கை பத்திரிகைகளில் வெளிவந்தது. பிரமுகரின மனம் குளிர்ந்தது.

அந்தப் பிரமுகரின் கார் டிரைவர் எனக்குத் தெரிந்த நண்பர். அவரை நான் தற்செயலாகக் கண்டபோது பஞ்சத்தைப்பற்றி விசாரித்தேன். அவர் கூறிய பதில் என்னைத் திடுக்கிட வைத்தது.

"பஞ்சமா? எதற்குப் பஞ்சம் ஏற்பட்டு விட்டது? எங்களுக்கு நடந்த விருந்துகளைக் கண்டாலே அந்த ஜில்லாவிலிருந்து பஞ்சம் வெட்கப்பட்டு ஓடவேண்டும்! முப்பழம், அப்பளம், பாயசத்தோடுதான் ஒவ்வொரு இடத்திலும் சாப்பிட்டோம். இப்படிச் சாப்பிட்டுவிட்டு சாப்பாட்டுக்கு பஞ்சம் என்று நான் எப்படி உன்னிடம் பொய் சொல்ல முடியும்? தண்ணீருக்குப் பஞ்சமென்றால் ஒப்புக்கொள்ள வேண்டியதுதான். ஏனென்றால் நாங்கள் குடிப்பதற்குத் தண்ணீரே எங்கும் கிடைக்கவில்லை. ஆரஞ்சுக்ரஷ்தான் ஒவ்வொரு இடத்திலும்; இல்லாவிட்டால் பாதாம்கீர்! எங்க முதலாளி கழுத்தில் விழுந்த ரோஜாப்பூ மாலையை மட்டும் கணக்குப் பண்ணினல் ஒரு பெரிய நந்தவனமே பயிர் பண்ணியிருக்கவேண்டும். மழையில்லை—வறட்சி ஏற்பட்டு விட்டதென்றால், அந்த ரோஜாப்பூ மாலைகளெல்லாம் வெறும கனவா? நான் கண்ணால் பார்த்தேனே..."

டிரைவரின் பிரசங்கம் நீடித்தது. 'உன் பிரசங்கத்திற்கும் பஞ்சமில்லைபோல் இருக்கிறது' என்று கூறிவிட்டு அவரிடமிருந்து தப்பித்தேன். இது கதைதான். யாரும் இதை நம்ப வேண்டாம்.

* * *

சென்னையில் விதவிதமான பஞ்சங்கள் வருவதுண்டு. திடீரென்று வீட்டுப் பஞ்சம் ஏற்பட்டுவிடும். சர்க்கார் ஆபீஸ்களைப் பக்கத்து ஜில்லாக்களுக்கு மாற்றுங்கள் என்று பொதுநலப் பிரியர்கள் ஆலோசனை கூறுவதோடு அந்த வீட்டுப்பஞ்சம் தீரும். தண்ணீர்ப்பஞ்சம் ஆண்டுக்கொரு முறை சிரஞ்சீவியாய் வந்துகொண்டிருக்கிறது. பள்ளிக்கூடங்களில் பையன்களை சேர்ப்பதற்கு இடம் கிடைக்காத பஞ்சமும் சமயா சமயங்

களில் தலைகாட்டும். தனிப்பட்ட குடும்பங்களை எடுத்துக்கொண்டால் எத்தனையோ பஞ்சங்கள்! மாதம் முடியும் போது என்னுடைய சட்டைப்பை, அலமாரி, மணி பர்ஸ், மேஜை டிராயர் முதலியவைகளைப் பஞ்சப் பிரதேசமாக நான் அறிவித்து விடுவதுண்டு. அங்கே தேடித்தேடிப் பார்த்தாலும் ஒரு சல்லி கிடைக்காது. இந்தப் பஞ்சத்தை எப்படி நிவர்த்திப்பது? மாதம் பிறப்பதை ஆவலுடன் எதிர்பார்க்க வேண்டியதுதான்! நிற்க.

தற்சமயம் சென்னையில் புது விதமான பஞ்சம் ஏற்பட்டிருக்கிறது. சென்னைச்சட்டசபையில் காங்கிரசுக்கு மெஜாரிட்டி கிடைக்காததால் ஆள்பஞ்சம்ஏற்பட்டு யாரைச் சேர்க்கலாம் என்று யோசித்துக்கொண்டிருந்தபோது தலைவருக்குப் பஞ்சம் ஏற்பட்டுவிட்டது. திக்குத் தெரியாத காட்டில் தேடித்தேடி அலைந்தார்கள் காங்கிரஸ் பிரமுகர்கள். 'கண்ணன் காட்டியவழி 'அவர்களுக்கு உடனே தட்டுப்பட்டது. 'பஜகோவிந்தம்' என்று மாம்பலம் முனிபுங்கவர் இசைத்துக்கொண்டிருந்தார். ராமாயணபாத்திரங்கள் அவருடன் கலந்துறவாடினர். பரமார்த்திகத்துறையில் இரண்டறக் கலந்திருந்தார் அவர். "அதோ பாரடி! அவரே எம் தலைவர்! அதோ பாரடி!" என்று பாட்டிசைத்தபடி காங்கிரஸ் தோழிமார்முனிபுங்கவர்வீட்டில் குழுமினர். டில்லிக்கும் சென்னைக்கும் தலைவர்கள் பறந்தார்கள்; கடிதங்கள் பறந்தன. நேரு "ராஜாஜி வருவாரெனில் மகிழ்வோம்" என்று குறிப்புக்காட்டினார். ஸ்ரீபிரகாசா மேல்சபையில் இடம் ஒதுக்கித்தந்து தம் நண்பர் ராஜாஜிக்கு அருள் மழை பெய்தார்! திரும்பத் திரும்பக் கூடிக்கூடிக் கலைந்த காங்கிரஸ் கட்சிக்கூட்டம் 'நல்ல' நேரத்தில் ஆச்சாரியாரைத் தலைவராக ஒருமனதாகத் தேர்ந்தெடுத்தது. இவ்வாறு சென்னையில் ஏற்பட்ட தலைவர் பஞ்சம் தீர்ந்தது. 'சென்னைக்கே விமோசனம்' என்று பத்திரிகைகள் வாழ்த்துரை பகன்றன. புதுத் தலைவர் தம்மைத் தேர்ந்தெடுத்த சீடர்களுக்கு 'அறிவுரை' புகன்றார். காங்கிரஸ் கட்சி மெலிந்துவிட்டது என்று சுட்டிக்காட்டிக் கிண்டல் செய்தார். ஒழுக்கத்தை வற்புறுத்தினார். சட்டசபை உறுப்பினர்கள், நிர்வாகத்தில் தலையிடக்கூடாதென்று கட்டளையிட்டார். கேட்டிருந்த சீடர்கள் கரகோஷம் செய்தார்கள். 'தீராத பஞ்சத்தைத் தீர்த்துவைத்தாய் வாழியவே' என்று அஞ்சலி செய்தார்கள்.

'கல்கி' பத்திரிகையை நான் படித்துக்கொண்டிருந்தேன். என் உள்ளம் சிரித்தது.

"ராஜாஜியை இப்போது சென்னை அரசியல் தலைமைக்கு அழைப்பது, ரமணரிஷியை 'முனிசிபல் கமிஷனர் வேலையை ஒப்புக்கொள்ளுங்கள்' என்று கூறுவதுபோலாகும்"




சென்று கடந்த சில நிகழ்ச்சிகளைத் தவிர்க்க முடியாததெனத் தெரிந்து ஏற்றுக்கொண்ட பின்னரும், நடக்காதவைகளைக் குறித்தே புலம்பி, இப்படியாகியிருந்தால்... அப்படி நடந்திருந்தால் என்ற பயனற்ற எண்ணச் சுழற்சியிலீடுபட்டு, பொன்னான பொழுதைப் போக்குவதில் மனித மனம் ஏனோ மோகம் கொள்கிறது. நிகழ்காலச் சம்பவங்களைவிடக் கோடிட்டு எல்லை சொல்லிவிட்ட, நடந்து போனவற்றில், நிகழாதவைகளைக் குறித்த பகற்கனவுகளில் என்ன சுகத்தைக் கண்டுவிடமுடியும்? இருந்தும், ஏனோ மனித இயல்பு தொன்றுதொட்டு இப்படித் தானிருந்து வருகிறது. இந்த நியதிக்குப் புறம்பானவனல்லை படகோட்டி மாணிக்கம்.

* * *

ஆறு பெருக்கற்று அடிசுடும் கோடையிறுதிக்காலம். ஊற்றுப் பெருக்கால் ஊர் உயிர் வாழ்ந்து வந்தது. மாலை நேரத்து மஞ்சள் வெயில் ஆற்றங்கரைப் பிரதேச வானவளைவில் சென்று மறையும் தருணம். சந்தடியற்ற தனியிடத்து ஆற்று மணற்திட்டு ஒன்றில், தன் வசமிழந்து சிந்தனைக்கடலில் மூழ்கியபடி உட்கார்ந்திருந்தான் மாணிக்கம். வறண்டிருந்த அவன் இதயம் போலவே எதிரே மணல்வெளியும் தோற்றமளித்தது.

உலர்ந்து போன தன் நாக்கை அடிக்கடி வாய் எச்சலில் ஊற வைத்துக் குதப்பிக்கொண்டான் மாணிக்கம். துடுப்புத் தள்ளும் கைகள் பல மாதங்களாக வேலையின்மையால் வலுவிழந்தன போல் சோர்ந்து தொங்கின. அவற்றிற்கு வேலை இதோ, இன்னும் இரண்டு நாட்களில் கிடைத்துவிடும்.

ஆடிப் புதுவெள்ளம் இரு கரையையும் அணைத்துச் செல்

லும். மறு வாரம் பதினெட்டாம் பெருக்கு!

'பதினெட்டாம் பெருக்கு!' நினைத்ததுதான் தாமதம். எண்ணங்கள் பெருகின, ஆடிப் பெருக்கையும் மீறிவிடும் வேகத்தில். மனவெள்ளத்திற்கு அணை கோலுவதுபோல "என்ன மச்சான்! துவண்டு போய்க் குந்தியிருக்கீங்க?" என்ற புதுக் குரல் அவனுக்குப் பழகிய குரல் தான்—அவன் மோன நிலையைக் கலைத்தது. திரும்பிப் பார்க்கையில், இடுப்பில் குடம் சுமந்து அங்கு சுந்தரி நின்றிருந்தாள்.

"இல்லேம்மா, ஒண்ணுமில்லே!" என்று வலியுறுத்தி வருவித்த புன்னகையை இதழ்களிலே ஓடவிட்டுச் சுதாரித்துக் கொண்டான் மாணிக்கம்.

"இதோ இருங்க; தண்ணி மொண்டாந்துடறேன்" என்று சொல்லி அவனைக் கடந்து சென்றாள் சுந்தரி.

"சுந்தரி! கொஞ்சம் குடிக்கத் தண்ணி தருவாயா?" என்று கேட்டவாறே எழுந்து அவள் பின்னால் நடக்கத் தொடங்கினான் மாணிக்கம். மோக வெளியில் கனவுக் கன்னியொருத்தியைத் தொடர்வது போலச் சென்றான். இரும்பு மனதையும் கவரும் காந்த அழகு படைத்தவளா இந்தச் சுந்தரி?

சுந்தரி திரும்பிப்பார்த்தாள். "மச்சான், நீங்க கரையிலேயே போய்க் குந்தியிருங்க. நான் கொண்டு வந்து தாரேன். நீங்க ஏன் சுடு மணலிலே வீணாக அலையணும்? இம்—போங்க."

அமைதியுடன் தயங்கி நின்றான் மாணிக்கம். அவள் அழகை அங்கம் அங்கமாக அவன் விழிகள் அளந்து கொண்டிருந்தன.

"அடியாத்தே! என்ன மச்சான் இப்படி முழிக்கிறே? யாராச்சும் ஏதாச்சும் நினைச்சுக்கப் போறாங்க. ஊரு ஏற்கனவே தலைதெறிச்சுக் கிடக்கு, ஒனக்கு ஏன் மேலே பொல்லாப்பு?" என்று சொன்னவள் அவன் பதிலையும் எதிர்பாராமல் விடுவிடுவென்று நடந்தாள்.

காந்தம் பிரிந்த இரும்பு நழுவுவதுபோல மாணிக்கம் தன் சுய நினைவில் வந்து நின்றான். அவளை வெறித்த தன் பார்வையைக் குறித்து அவனுக்கே வெட்கமாயிருந்தது. "பிறர் கண்ணாலம் கட்டிவிட்ட பெண்ணைத் தன் அந்தக் கண்களால் ஆசைபெற விழிக்க அவனுக்கு என்ன உரிமையிருக்கிறது? சுந்தரி தன் வெகுளியான இயல்பு காரணமாகத் தப்பர்த்தம் செய்து கொள்ளமாட்டாள். ஆனால் ஊரார் யாவரும் சுந்தரியின் மனப்போக்குடையவர்களா? இல்லையே! அப்படியே யிருந்தாலும் சுந்தரியின் உலக அனுபவம் முதிராத செய்கையைத் தன் ஆவல் அடங்கப் பயன்படுத்திக்கொண்டதாகவல்லவோ ஆகிறது?"

தன்னைத்தானே நொந்து கொண்டு பலி ஆடுபோலத் தலையைக் கவிழ்த்தவாறு மறுபடியும் மணல்திட்டை அடைந்தான்.

இடுப்பில் குடம்தாங்கி இடை குலுங்கச் சுந்தரி வந்துகொண்டிருந்தாள்.

அவனருகில் வந்து "இந்தா தண்ணி, எப்படிக் குடிக்கப் போறே?" என்றாள்.

"அதுதான் தெரியவில்லே. கொண்டா, குடத்தோடே குடிச்சாப்போவுது"

"துடுப்புத்தளாத கை சீவனிருக்காது. அது வேணும் இந்தாப்புடி;" என்று ஊற்றுப் பட்டையை அவன் கையில் கொடுத்தாள். அதை வாங்கியவன் பட்டையில் அவள் வதனத்தின் பிரதிபிம்பத்தைக் கண்டுவிட்டான். மேலே செய்வதறியாமல் உணர்விழந்த அவன் நிலை கண்டு சுந்தரிக்குச் சிரிப்பும் இரக்கமும் ஏற்பட்டன.

"நல்ல பைத்தியம் மச்சான், இந்தா புடி-தண்ணி!"

உலர்ந்த நாக்கு மட்டுமா திருப்தியடைந்தது? பட்டையில் ஊற்றப்பட்ட தண்ணீரில் சுந்தரியின் முகம் நிழலாட அது கண்டு அவன் மனம் எவ்வி எழுந்த உணர்ச்சி, கைசோத்தில் நழுவி விழவிருந்த குடத்தை லாகவமாகப் பிடிக்க முயன்ற முயற்சியில் மேலாடை சற்றே சரிந்து அழகை வெளிக்காட்டி மறைத்த மாயம், இவை மாணிக்கத்திற்குப் போதையூட்டின.



"போதும் போதும், நிறுத்து"

"நான் வரட்டுமா, மச்சான்? இதோ பாரு, வருசம் ஒண்ணு பிடுச்சு. போனதை நெனைச்சுப் பொலம்பி ஆவற காரியம் என்ன? இங்கே பாருங்களேன். பொன்னி தங்கச்சியைக் கட்டிக்கிங்க. அக்கா மனசும் குளிரும்" என்ருள் சுந்தரி.

"சுந்தரி, என் மனசு இன்னும் தணியல்லே, அதுக்குள்ளாறே கல்யாணமா? அதுவும் அந்தக் குடும்பத்தோடே மறுபடியும் சம்பந்தம் பேசவா? அது நடக்காது" என்ருன் உறுதி படைத்த குரலில்.

"ஆத்துலே தண்ணிவந்தாத் தணியுது! அப்புறம் உன் நோக்கம்" என்று கூறி இடம்பெயர்ந்தாள் சுந்தரி.

"குறைகுடமா இருக்குதே. தளும்பாது?" என்ருன் மாணிக்கம்.

"ஆமாம், உன் மனசு, என் மனசு இதெல்லாம் என்றைக்கும் குறை குடந்தான். தளும்பினுத் தெறிச்சுட்டுப்போவுது"

ஆடிப்பெருக்கு! மாணிக்கத்தின் நினைவுகள் சென்ற வருட நிகழ்ச்சிகளில் சென்று கலந்தன.

* * *

அன்ருெருநாள், சுழியிட்டுச் சீறியெழுந்து செல்லும் காவிரியின் பெருக்கு கண்கொள்ளாக் காட்சியாயிருந்தது. தோணித் துறையில், வெள்ள வேகத்தோடு போட்டியிடும் மனோவேகத்தில் மாணிக்கம் அமர்ந்திருந்தான். கடந்த ஒருவாரமாகவே அவன் குடும்ப வாழ்வில் மனக்கசப்பு நிலவிவந்தது. பொன்னியும் அவனும் அதிகமாக முகம் கொடுத்துப் பேசுவது நின்று, இருவரும் முடுக்கிவிட்ட இயந்திரம்போல அவரவர் வேலையில் கருத்தாயிருந்தனர். இழைந்து வேயப்பட்டிருந்த அவர்களின் வாழ்க்கைக் கூரையில் எங்கிருந்தோ பறந்துவந்து விழுந்த ஒரு சிறு பொறியால் புகை கிளம்பிற்று. புகை நெருப்பாகப் பற்றிவிடுமுன்பே அவித்துவிட விரும்பினுள் பொன்னி. மாணிக்கமோ பொறியைத் தேடி யெடுத்து அப்புறப்படுத்தவோ, அல்லது பொறி பரவாமலிருக்கக் கூரைமுழுதும் நனைத்துவிடவோ விரும்பும் வீண் முயற்சியில் இறங்க விரும்பினுன். ஆகவே பிணக்கு தீருவதாக இல்லை. இந்தச் சூழ்நிலையில் வீடு அவனுக்கு வெறுப்பையளித்ததில் வியப்பில்லை. படைப்புக்கு வேண்டிய பொருள் சேகரிப்பதில் பொன்னி முனைந்திருந்தாள். மன அமைதி காணவேண்டித் தோணித்துறையை நாடி வந்தான் மாணிக்கம். பதினெட்டாம் பெருக்கு நாளாதலால் அக்கரை செல்லும் கிராக்கி எதுவுமே வரவில்லை.

"ஐயோ, ஐயையோ! மாணிக்கம், பொன்னி ஆத்தோடே போவுது...ஓடியா!" என்ற கூக்குரலும் அதைத் தொடர்ந்து யார் யாரோ ஓடி வரும் ஓசையும் கேட்கவே, கல்லெறி தூரத்

திலிருந்த அடுத்த படித் துறையை நோக்கி அவனும் ஓடினான். அவன் ஓடிச்சென்று அடையுமுன்பே காரியம் மிஞ்சி விட்டது. பொன்னி, சுழல் ஒன்றில் சிக்கி இரண்டு வாய் தண்ணீர் குடித்துவிட்டாள். என்றாலும் துணிவோடு மாணிக்கம் தண்ணீரில் குதித்தான். எதிர்நீச்சல் போட்டு அவளருகில் சென்றுவிட்டான். மூன்றாம் முறையாக நீர்மட்டத்திற்கு மேலே பொன்னி வந்தாள். நீர்திரையிட்டிருந்த கண்களால் காப்பாற்ற முனையும் மாணிக்கத்தையும் பார்த்துவிட்டாள். என்றுமில்லாத ஒரு திருப்தி அவள் கண்களில் மலர்ந்தது. ஆவலோடு கைகளை நீட்டினாள். மாணிக்கம் எட்டிப் பிடிக்குமுன்னரே மறுசுழல் ஒன்று அவளைத் தன்னுள் அடக்கிக் கொண்டது.

பொன்னி தண்ணீரில் தத்தளித்துத் தடுமாறி உயிருக்கு மன்றாடியதைத்தான் மாணிக்கம் பார்த்தான். அவள் கண்களில் அந்தக் கடைசி நிமிஷத்தில் அணையும் விளக்கின் சுடரொளி போலத் தோன்றி மறைந்த திருப்தியைக் காணத் தவறிவிட்டான். மறுகணம், தானும் முழுகிவிடலாம் என்றே நினைத்தான். கரையிலிருந்த அத்தனை கூட்டமும் 'குய்யோ முறையோ' என்று அவலக் குரலை எழுப்பி ஆரவாரித்தது. கூக்குரலைக் கேட்டு ஓடிவந்த சிலரும் வெள்ளத்தைக் கண்டு மலைத்து இறங்கவும் தயங்கினர்.

மாணிக்கத்தின் கால்களில் ஏதோ தட்டுப்பட்டது. முழுகியவன் தடவிப் பார்த்தான். நீண்ட சதைப் பிண்டம்தான்... கால்கள் ...உடம்பு...கைகள்...! அப்படியே முழுப்பலத்தையும் பிரயோகித்துப் பொன்னியை வெளிக்கொணர்ந்தான். தோளில் சாய்த்துக்கொண்டு ஆற்றின் ஓட்டத்தோடு சிறிது தூரம் சென்று கரையேறினான். ஆனால் பொன்னி அதற்குள்ளாகச் சவமாகிவிட்டாள். பொன்னியின் உடல் மீது விழுந்து புரண்டு புரண்டு அழுதான் மாணிக்கம். ஒருயிரைக் குடித்தவெறியில் பொங்கியெழுந்து ஓடியது ஆறு.

"அக்கா, சேதி தெரியுமா? மாணிக்கம்—பொன்னி இவங்களுக்குள்ளே ஒருவாரமாவே தகராறாம். பொன்னி சொல்லிச்சே. அத்தான்நடத்தைசரியாயில்லையாம். அந்த மேனா மினுக்கியில்லே, கணபதியாபிள்ளை மகள் சுந்தரி-அவளைச்சுத்திக்கிட்டுத் திரிஞ்சுதாம். இவ கண்டிச்சாளாம். அதிலே கோபமாம். பாவம்! சிறிது; என்னத்தை நெனச்சு என்ன செஞ்சுதோ?" ஊர்வாய் பேசிற்று.

* * *

ஒரு வாரமாகவே சின்னஞ்சிறு சச்சரவுகள். எதற்கெடுத்தாலும் எரிந்து விழுந்தான் மாணிக்கம். அவன் சொல்வதையே நம்பாமல் மேலும் மேலும் வெளி மனிதர்களைப்போலவே பொன்னியும் தன்னைச் சந்தேகித்தது அவனுக்

குப் பிடிக்கவில்லை. அவள் சந்தேகம் நியாயமானதாக அவனுக்குப் படவில்லை. எனவே, தன் செய்கையைத் திருத்திக்கொள்ளவும் முயலவில்லை. தவறு என்று நினைத்தாலல்லவா திருத்தம் தேவை?

தன் பலவீனத்தை அவன் மனம் உணர்ந்தது. அதை வெற்றி கொள்ளவும் முடியவில்லை. நேருக்கு நேராகப் பொன்னியிடம் ஒப்புக்கொள்ளவும் தயாராக இல்லை. ஒப்பினால் தன்னைப் பற்றி அவள் சந்தேகத்தை ஆமோதிப்பதாகவல்லவோ ஆகிவிடும்? ஆகவே, போகிறபோக்கில் விட்டுப்பிடிக்க நினைத்தான்.

"கணபதியா பிள்ளை மகள் சுந்தரியை மாணிக்கம் தொட்டு விட்டான். அவள் கொண்டவனை விட்டுப் பிறந்த வீடு புகுந்த வாழா வெட்டி! மாணிக்கத்திற்கும் சுந்தரிக்கும் வெகுநாட்களாகவே தொடிசு உண்டாம். அன்றைக்கு இருவரும் நரத்துக்குப் போக இருந்தாங்களாம். காவேரி யாத்தாவுக்கே பொறுக்கவில்லை. அதுதான் பொன்னியின் கதி அப்படியாயிற்று!" இப்படிப் பல விமரிசனங்கள் எழுந்தன.

நடந்த விஷயம் இதுதான். சுந்தரி அன்றொரு நாள் அவசர வேலையொன்றின் நிமித்தம் நகரத்துக்குச் செல்லவேண்டித் தோணித் துறைக்கு வந்தாள். அக்கரை போகவேண்டியகிராக்கி வேறு ஒருவருமில்லை. அவளை மட்டும் ஏற்றிக்கொண்டு படகைச் செலுத்தினான் மாணிக்கம்.

சுந்தரி பிறவியிலேயே வெள்ளை உள்ளம் படைத்தவள். ஒரு நிமிடத்தில் பிறருடன் உறவு முறை சொல்லிப் பழகிவிடுவாள். இந்த ஒரு பழக்கம் அவளைச் சிலருக்கு நல்லவளாகவும், சிலருக்கு ஒரு புதிராகவும், பழங்காலத்தவருக்கு ஆகாதவளாகவும் செய்தது! அவளைக் கொண்டவனுக்குக்கூட அவள் பிறருடன் பழகும் தன்மை பிடிபடவில்லை. 'தன்னைப் புரிந்து கொள்ளாதவனுடன் வாழ்வதைவிடத் தனித்து வாழ்வது மேல்" என்ற நினைப்பில் 'வாழாவெட்டி' என்ற சுடுசொல்லையும் ஏற்றுப் பிறந்த வீடு நுழைந்துவிட்டாள் சுந்தரி.

காட்டிலெரிக்கும் அந்நிலவு யாருக்கும் பயன்படாமற் போகிறதே என்று அங்கலாய்த்தவர்களில் மாணிக்கமும் ஒருவன்.

துடுப்பை அவன் கைகள் பற்றியிருந்தனவே தவிர, மனத் துடுப்பு அவளின் இதய நதியைத் தாண்ட எண்ணத் தோணியைத் துணை அழைத்தது. அவளழகில் வீடுபட்டு மெய்மறந்த பரவச நிலையில் துடுப்பின்றியே சென்ற படகு, பேயாக வீசிச் சென்ற பெருங் காற்று ஒன்றில் ஒரு பக்கமாகச் சாய்ந்தது. கலவரமடைந்த சுந்தரி திகைத்துப் பதறியவளாய்ப் படகு சாய்ந்த பக்கமாகவே ஓடிக் கால் இடறித் தண்ணீரிலும் விழுந்துவிட்டாள்!

மாணிக்கம் 'தடா'லென்று நீரில் குதித்தான். அவள் தலைமயிரைப் பற்றியிழுத்து அவள் உடலைத் தன்னிரு கைகளால்

அணைத்தபடி தாங்கி எடுத்துப் படகில் அமர்த்தி மூர்ச்சை தெளிவித்து, இக்கரைக்குக் கொண்டு சேர்த்தான். இதை ஓரிரு விஷக் கண்கள் பார்த்து விட்டன. கதைக்குக் கால் முளைத்தது. கற்பனைச் சிறகுகள் முளைத்தன. கதை ஊருக்குள் சிட்டாகப் பறந்தது.

அன்று தொடங்கிச் சுந்தரி, மாணிக்கத்தை எங்காவது வழியில் கண்டால் நன்றி பொங்கும் கண்களுடன் இரண்டொரு வார்த்தைகள் பேசிச் செல்வதை வழக்கமாக்கிக்கொண்டாள். இது ஊராரின் கட்டுப்பாடான வாழ்க்கைக்குப் புறம்பானது என்று பொன்னி எடுத்துச் சொல்லும் பொழுது, அவள் பேச்சு அவனுக்குக் குற்றமாகவே பட்டது. அவனுக்கு அவள்மீது கோபமும் ஆத்திரமும் வளர்ந்தன. தாம்பத்யம் பிளவுபட்டது. சச்சரவுகள் மூண்டன.

அவன் கட்சி இதுதான். 'ஆபத்தில் உதவப் போனேன். அப்பொழுது பிற பெண்ணின் தூய்மையான உடலைத் தீண்டுகிறோமே எனத் தயங்கியிருந்தால் அன்று சுந்தரியின் உயிர் பலியாகியிருக்கும். அதன் நன்றியறிதலாக அவள் அவனைக் காணநேரும்பொழுது பேசுகிறாள். ஒரு பெண்ணுடன் பேசிவிட்டதால் அவள் கற்புக்கு, அல்லது நடத்தைக்குப் பங்கம் விளைந்து விடுமா என்ன? புருசனை மனைவி நம்பாவிட்டால் ஊரும் உலகமும் எப்படி நம்பும்? பொன்னி அசூயை காரணமாகத்தான் சுந்தரியை வெறுக்கிறாள். உண்மையில் சுந்தரி எவ்வளவு நல்ல பெண்!'

ஊர் நம்புமா இப்படி மாணிக்கம் சொல்வதை! அவள்—பொன்னி வெடிக்கும் எரிமலையானாள். எரிமலை வெடித்தது; முடிவு...ஆம்; அவள் ஆற்றில் குதித்து மாண்டாள்!

'ஐயோ! பாவம்; பொன்னிக்குத்தான் எத்தனை அறியாத மனசு. ஊர்க் கேள்விகளுக்குப் பதில் சொல்லி மீளுவதா? கொண்டவன் கூறுவதை நம்புவதா? தத்தளித்திருப்பாள். இதற்கெல்லாம் ஒரு முடிவு நெருங்குவதைக்கண்டபொழுது அதிலிருந்து தப்ப அவள் விரும்பாதது நியாயம்தானே? கதையின் உண்மையும் பொய்யும் வெளிவந்து ரசாபாசமாகும் நாடகத்திற்குத் தான் என் சாட்சியாக இருக்கவேண்டும் என்ற எண்ணத்தில் ஆற்றோடு போகத் துணிந்திருப்பாளோ? அப்படியானால் அவள் முடிவுக்கும் காரணம் என் செய்கைதானே?'

அவன் எண்ணங்களே அவன் மனதை அறுத்தன. பொன்னியிருக்கும்பொழுதே சுந்தரியின் பேரில் அவனுக்குச் சபலம் ஓரோர் பொழுது எழுந்து அடங்கியதுண்டு. ஊராரின் கட்டுக் கதையைத் தகர்க்கவேண்டிக் கண்ணியமாகவே நடந்துகொண்டான். ஆனால் பொன்னியின் மறைவுக்குப்பின் அவன் முழு

மனமும் ஏனே சுந்தரியின்மேல் சாய்ந்தது.

'தன்னைப்போலவே அவளும் எண்ணுவாளோ? இருவரும் எங்காவது கண்காணுத இடத்தை நாடிச் சென்று பிழைத்தால்...? வாழ்க்கை அப்பொழுது எத்தனை இன்பமளிக்கும்?...அவள் சம்மதிப்பாளா? ஏன் மாட்டாள்...? தன்னைக் குறைகுடம் என்று அன்று சொன்னளே? அதன் பொருள்? ஊரிலுள்ளவர்களையெல்லாம் விடத் தன்னிடம் மட்டும் அவள் பாராட்டும் நேசம் காரண மற்றதா?' அவன் மனமாளிகை இப்படி எழத் தொடங்கியது.

* * *

அடுத்த வாரம் இரண்டாம் நாள அதிகாலை நாலு மணியளவுக்கு 'மச்சான் மச்சான்' என்ற குரல் கேட்டு எழுந்தான் மாணிக்கம்.

குடிசை வாசலில் கிழக்கு வெளுக்காத வேளையில் சுந்தரியின் திடீர் வரவு அவனுக்கு எல்லை கடந்த வியப்பை ஏற்படுத்தியது. 'தன்னையடிமை கொண்ட அதே எண்ணங்களின் தூண்டுதலே அவளையும் தன்னை நாடி வரச் செய்திருக்குமோ?' என்றே நினைத்தான். அவசரமாக, உடனே அக்கரை செல்ல வேண்டுமென்றுள் சுந்தரி. மாணிக்கம் பதில் கூறுமல் அவளைத் தொடர்ந்தான்.

ஆற்றங்கரையின் அமைதியைக் கலைத்துச் 'சலசல' வென நீரைக் கிழித்துக் கொண்டு எதிர்க்கரை நோக்கிச் சென்றது படகு. மாணிக்கமும் சுந்தரியும் ஒருவரையொருவர் மௌனமாகப்பார்த்துக்கொண்டனர். விடி வெள்ளியின் மங்கிய வெளுப்பில் இருவர் முகமும் சுளிதது ஒரு கேள்விக்குறியைப் போட்டுக்கொண்டது.

அப்பொழுதுதான் அலர்ந்து நீர்மட்டத்தில் மிதக்கும் செந்தாமரை போன்ற சுந்தரியின் முகமலரில் அழகு அலைவீசியது. மாணிக்கத்தால் தாளமுடியவில்லை. கண்களும் கைகளும் மனமும் உணர்ச்சிகளும் மாறி மாறித் துடித்தன. அவன் தடுமாற்றத்தைக்கண்டு அனுதாபங் கொள்ளும் வாயிலாக நெடுமூச் செறிந்தாள் சுந்தரி. எளிதில் ஒரு முடிவு கண்டுவிட்ட மாணிக்கம், துடுப்பைப் படகில் எறிந்து விட்டு 'சுந்தரி சுந்தரி' என்று அவளை நெருங்கினன். படகு இப்படியும் அப்படியுமாக ஆட்டம் கண்டது. மாணிக்கத்தின் கண்களில் துள்ளிய வெறியுணர்ச்சியைப் புரிந்துகொள்ளச் சுந்தரிக்கு வெகுநேரமாகவில்லை.

"மச்சான்! வேணும்; என்னைத் தொடாதே! இந்தப்பொல்லாத ஊரிலே உன்னைமட்டுந் தான் நம்பினேன். அண்ணன் போல உன்னை மதிச்சேன். எல்லாரையும்போல நீயும் என்னைத் தப்பா நினைச்சுக்கிட்டியே?" என்றுள். அவள் உடம்பு 'வெட வெட' வென்று நடுங்கியது.

மாணிக்கம் சூடுகண்ட பூனை போலபதுங்கிப்பின்வாங்கினான்.

படகு கரை தட்டியது. படகிலிருந்து இறங்கிக் கரைமேட்டில் சென்று நின்றாள் சுந்தரி.

"மாணிக்கத்தண்ணே! நான் வரட்டுமா? உன் தங்கச்சியை மறக்கமாட்டியே? எங்க வீட்டுக்காரரு பழசெல்லாம் மறந்துவிட்டு என்னை வரச்சொல்லித் தகவல் அனுப்பியிருக்காரு. அதனாலே புறப்பட்டுப் போறேன். இந்த ஊர்க் கண்ணுலே விடிஞ்சு விழிக்க வேணும்னு இப்போ கிளம்பினேன். போயிட்டுவாரேன்" என்றாள்.

"தங்கச்சி! சத்தியமா உன்னை மறக்கமாட்டேன். நீதானே என்னை மனிதனா மாத்தினே! போயிட்டுவா. புருசனோடு நல்லாயிரு. புத்தியாப் பொளச்சுக்க."

சுந்தரியின் நிழற்கோட்டுருவம் தொலைவில் சென்று மங்கவும், இருள் கரைந்து கீழ்வானில் இரவி யெழுந்தது. மன இருள் பிரிந்த மாணிக்கம் சுந்தரி சென்ற பாதையிலே பதித்திருந்த கண்களை நீரோட்டத்திற்குத் திருப்பினான்.

ஆற்றில் வந்த புதுவெள்ளம் அவன் மனத்தின் பழைய வெள்ளத்தையும் அடித்துக்கொண்டு போவதை மாணிக்கம் கண்ணிமைக்காமல் பார்த்துக் கொண்டே சிலைபோல நின்றான்!

---


## மாதவிடாய் நின்றுபோனதா?

**நிகரற்ற மருந்து (தேவி பில்ஸ்)** Regd. by the Central Drugs Laboratory of Govt. of India. Under No. CDL/688

எக்காரணத்தினாலும் எத்தனை மாதமானாலும் நின்றுபோன மாதவிடாய் அதிசுலபமாகவும் அதிசீக்கிரமாகவும் தவறாமல் உடனே வெளியாகும். அநேக நற்சாக்ஷி பத்திரங்கள் பெற்ற திவ்ய ஔஷதம் உத்திரவாதமுள்ளது. போலி மருந்துகளை வாங்கி ஏமாறுதீர்கள். சாதாரண கேஸ்களுக்கு (Ordinary) விலை ரூ. 8-8-0 மாதங்களான கேஸ்களுக்கு (Special) ரூ. 10-8-0 (தபால் சிலவு தனி)

## கர்ப்பதடை

**நிகரற்ற மருந்து (ஸ்பெக் பில்ஸ்)** Government Registered No. 266.

12 நாட்கள் சாப்பிட்டால் 6 வருஷத்திற்கு சாஸ்வதமாக கருவைத்தடுக்கும். மாதவிடாய் தவறாது. அநேக நற்சாக்ஷி பத்திரங்கள் பெற்ற திவ்ய ஔஷதம். போலி மருந்துகளை வாங்கி ஏமாறுதீர்கள். (ஸ்பெக் ஜெல்லி) உபயோகித்தால் டெம்பாவரியாக கருவை தடுக்கும். பில்ஸ் விலை. ரூ. 12-0-0 ஜெல்லி விலை ரூ. 6-8-0 (தபால் சிலவு தனி)

Mfgrs: SEENU & CO., Post Box, 1638, ( ) MADRAS-1.

பிரான்ச 134, SERANGOON ROAD. சிங்கப்பூர்.

சிலோன் ஏஜண்ட: NEW COLOMBO MEDICAL STORES, 82 MAIN ST., கொழும்பு-11.



# ஓடாத தேர்!

தமிழ்த்தும்பி

அலுவல் காரணமாக அவளைப் பிரிந்திருந்தான் அவன். அவர்களுக்குள் பிரிவு ஏற்பட அநேக காரணங்கள் ஏதுவாக அமைந்தன. தலைவனுக்குப் பிடித்துத் தலைவிக்குப் பிடிக்காது ஏற்படும் பிரிவு பரத்தையிற் பிரிவு. அதில் தலைவன் நிலையும் தலைவி நிலையும் முற்றும் மாறுபட்டிருக்கும். மற்றும் கல்வி கற்பதற்காகப் பிரிவு, நாட்டைக் காக்கும் நற்பணிக்காகப் பிரிவு, எதிரிகள் இருவரிடை ஏற்பட்டுள்ள மன மாற்றங்களைப்போக்கத் தூதுவத் தொழிலுக்காகப் பிரிவு, நண்பன் ஒருவனுக்கு ஏற்பட்ட இன்னலைக் களையப் பிரிவு, பொருள் தேடும் தன்னலத்துக்காகப் பிரிவு — இவ்வாறு பிரிவுகள் நிகழ்வது இயல்பு. இந்த வகைப் பிரிவில், பிரிவுத் துயரம் குறுக்கிட்டாலும் தலைவன், தலைவி இருவரிடையேயும் ஒரு நல்லதுக்காகப் பிரிவு என்ற ஆறுதல் இருக்கும்.

இப்போது அவன் அவளை விட்டு அகன்றது நாட்டைக் காக்கும் நற்பணிக்கு என்று கொள்வோம். தான் பிறந்து, வளர்ந்து, வாழ்ந்த தாய் நாட்டுக்கு ஆபத்து என்றதும், அவர்கள் நாட்டு மண்ணில் ஊறி விட்ட நாட்டுப் பற்று என்னும் பண்பு அவர்கள் இருவரையும் உந்தியது போர்முனைக்கு. அவள் அவனைத் துரிதப்படுத்திக் களத்துக்கு அனுப்பினாள்; தானும் சென்றிருப்பாள் அவன் மறுத்திராவிட்டால். பிரிவின் துன்பம் இருவரையும் வாட்டிற்று. நாட்டின் அழைப்புக்கு முன் காதலின் அழைப்பு எம்மாத்திரம்?

போர் இனிதே முடிந்தது. வெற்றி அவனுடைய அரசனுக்கே. நாடு காக்கப்பட்டது. வீரம் அவனுக்குத் தந்த பரிசான பல வடுக்களோடு அவன் வீடு திரும்பினான். காரியம் வெற்றிகரமாக நிறைவேறிய பெருமை அவன் உடல் முழுதும் நர்த்தனமாடியது. இப்போது தான் அவனுக்குக் காதலியின் நினைவு வந்தது.

தேர் ஒன்றின்மீதுதான் அவன் ஊர்ந்துகொண்டிருந்தான். அத் தேரை இழுத்த

வெண்புரவிகள் ஓட்டத்துக்குப் பெயர்போன வம்சத்திலே பிறந்தவை. அதை ஓட்டின பாகனே வேகத்துக்கு இலக்கியமாகிவிட்டவன். சாட்டையையோ, சவுக்கையோ கையிலெடுக்காமலேயே அவன் தேரை வெகு விரைவாகச் செலுத்தி வந்தான். தேர் ஊர்ந்து செல்லுகிறதா, மிதந்து செல்லுகிறதா, பறந்து செல்லுகிறதா என்ற ஐயம் பார்ப்பவர்களுக்கு உண்டாகுமாறு தேர் முன்னோக்கி ஓடிக்கொண்டிருந்தது.

வழியில் ஒரு சேவல் மிகக் கம்பீரமாகத் தன் பேடையை அழைத்துக்கொண்டு ஏதோ கொரித்துக்கொண்டிருந்தது. ஜோடி மான்கள் துள்ளிக் காதல் ஆட்டம் நடத்தின. இதைக் கண்ணுற்றான் தலைவன். அவன் மனதில் உடனே தலைவியை அடையவேண்டும் என்ற எண்ணம் வேரூன்றிற்று. அவன் தேரோட்டியை விளித்தான்.

"பாகனே! தேரை இன்னும் வேகமாக ஓட்டு!"

பாகன் குரலொலி கொடுத்தான். அதன் அர்த்தத்தைப் பழக்கத்தால் நன்கு தெரிந்துகொண்டிருந்த வெண்குதிரைகள் வேகத்தை அதிகப்படுத்தின.

"வலவ! நான் தலைவிக்குக் கொடுத்த கெடு இன்றோடு தீர்கிறது. அவளை உடனடியாக நான் சேரவேண்டும்!"

தேரோட்டி சீழ்க்கையொலியை உரக்கச்செய்து இன்னும் பலவகையாக வாயால் புரவிகளை மிரட்டினான். தேர் இப்போது விரையவில்லை. காற்றில் மிதந்து சென்றது!

"குதிரையோட்டியே! குதிரையின் வேகம் இவ்வளவுதானா? நான் தவறுதலாக இன்னும் வேகமாக அல்லவா மதிப்பிட்டு விட்டேன்!"

தேர்ப்பாகனுக்கு அவமானம் தாங்கவில்லை. சவுக்கால் காற்றுவெளியில் சத்தப்படுத்தினான். அக்குதிரைகள் சவுக்கின் ஓசையைக் கேட்டுப் பல ஆண்டுகளாகியிருக்கும். என்னவோ ஏதோ என்று பின்னும் அவை விரைந்தன. பாதையின் பின்னால் ஒரே புழுதி பறந்தது.

"பாகனே! அதோ பார்! அந்த மேகங்கள் எப்படி ஓடுகின்றன!"

தேரோட்டிக்குப் பொறுக்க முடியவில்லை. 'சுளீர்' என்ற ஓசையைப் பலமாக அவன் சவுக்கு எழுப்பிற்று. குதிரைகள் உடலில் அவை பட்டன. இப்போது குதிரைகளின் வேகம் மிகப் பெரிதாயிற்று. முன்பு புழுதி பறந்தது! இப்போது தேரோ காற்றுவெளியில் பறந்தது.

தலைவனுக்கு இன்னும் அமைதியுண்டாகவில்லை. தேர் அப்படியும் இப்படியும் ஆடி அவனும் தேருக்குள் அசைந்தான். தேரின் பக்கவாட்டத்தில் அவன் முதுகும், மார்பும் ஓங்கி இடித்தன. வெங்கொடுமைச் சாக்காட்டில் வீரப் புண்கள் பெற்ற அவன் உடலுக்கு இது ஒருபொருட்டாகக் கூடத்

தோன்றவில்லை. அவனுக்கு இன்னும் வேகம் சேராதா என்ற ஒரே ஆசை!

ஆகாயத்தை நோக்கினான் தலைவன். வெண்மேகங்கள் ஆங்காங்கு சிதறியிருந்தன. மேகத்தின் வேகத்துக்கு மேல் தேர் ஓடுவதாகப் பாகன் நினைத்தான். தலைவன் கண்ணுக்குப் புயல் காற்றில் வெண்பஞ்சுப் பொதி பறப்பது போல மேகத்தின் விரைவு தென்பட்டது; தேர் ஆமைபோல நகருகிறது என்று தலைவனுக்குத் தோன்றிற்று. பிரிவுக்கு முடிவு தேடும் அவன் பேராசைக்கு முன் பாகனும், பாகனின் ஓட்டும் திறமும், குதிரையின் கற்பனை செய்யக் கூடாத விரைவும் எம்மாத்திரம்! தேரைவிட வேகமாக ஓடுவதாக அவன் கண்முன் தோன்றிய மேகத்திரளிடம் சொன்னான்: "ஓட்டப் பந்தயத்தில் போட்டியாளனே இல்லாத மேகங்களே! நீங்கள் ஓடுகிறீர்கள், இன்னும் வேகமாக ஓடுங்கள், இன்னும் வேகமாக ஓடுங்கள். நந்திவர்மனுடைய நன்னாட்டுக்கு விரைந்து போங்கள். அங்கு அழகான நெற்றியைக்கொண்ட என் தலைவி எனக்காக உயிர் வேதனைப் பட்டுக்கொண்டிருப்பாள். அவளை உங்களால் அடையாளங் கண்டுகொள்ள முடியுமோ என்னவோ தெரியாது! ஒருவேளை அவளைக் கண்டு பிடித்துப் பார்த்துவிட்டால் அவளிடம் ஒரு வார்த்தை சொல்லுங்கள்.

'ஓடாத தேர் ஒன்று நந்திவர்மனுடைய நன்னாட்டின் பக்கமாக ஊர்ந்து வருகிறது. அது அநேகமாக உன் தலைவன் தேராக இருக்கும். அத்தேருக்குள் தசையும், இரத்தமும் கொண்ட உருவம் வரவில்லை. ஏதோ ஒரு கூடு, எலும்புக்கூடு போலக் காட்சியளிக்கும் உருவம், பெருமூச்சு விட்டுக்கொண்டு வருகிறது. ஓடாத தேரில் வரும் அக் கூடு இச்செய்தியை உன்னிடம் அனுப்பிற்று,' என்று சொல்லுங்கள். உங்களுக்கு என்றும் என் நன்றி"

கேட்ட பாகனுக்கு என்ன செய்வது என்றே தெரியவில்லை. அவன் அப்படியே அயர்ந்து விட்டான். புரவிகள் என்னவோ தம்மால் ஆனமட்டும் ஓடின. நல்ல மாட்டுக்கு ஒரு சூடு போதாதா?

* * *

நந்திக் கலம்பகத்தில் வரும் இந்த அருமையான பாடல் காதலனின் துடிதுடிப்பான பதட்டம் மிக்க காதலுள்ளத்துக்கு எப்படிப்பட்ட மெருகைத்தருகிறது! ஓடுகின்ற மேகமாம், ஓடாத தேராம், தேரில் வருவது வெறுங் கூடாம். இதைவிடப் பிரிவுத் துயர் எப்படி வெளிப்படும்? தலைவனின் ஆசை உள்ளம், அன்பின் மிகுதி எவ்வளவு அழகாக வருணிக்கப்படுகிறது!

ஓடுகின்ற மேகங்காள்! ஓடாத தேரின் மிசை
கூடு வருகு தெனக் கூறுங்கள்—நாடியே
நந்திச் சீராமனுடை நன்னகரில் நன்னுதலைச்
சந்திச் சீராமாகில் தான்.

—நந்திக்கலம்பகம்

[நந்திச் சீராமன்-நந்திவர்மன்; நுதல்-நெற்றி; சந்திச் சீராமாகில் தான்—சந்தித்தால்]

# நல்ல உலகம்!

மு. கணேசன்

மாஞ்செடி கொடிகள் எல்லாம் ஓடிக்கொண்டிருக்கின்றன! இல்லை—ஓடுவதுபோல என் கண்களுக்குத் தோற்றம். ஓடிக்கொண்டிருந்தது, நான் உட்கார்ந்திருந்த ரயில்தான்!

திடீரென வண்டியினுள் நல்ல மணம் வரத்தொடங்கியது. சுற்றுமுற்றும் பார்த்தேன். யாரோ ஒருவன் கூடை நிறைய வண்ணத்தாமரை மலர்களை வைத்துக்கொண்டு மாலை தொடுத்துக்கொண்டிருந்தான். தாமரை! சேற்றிலே பிறந்து, செல்விழியாரின் கூந்தலிலே இடம்பெறுகிறது!

“ஆனால், இதென்ன?”

“தாழம்பூ!”

“இதிலே பூ நாகம் இருக்கும் என்பார்களே!”

“அழகிலிருந்து ஆபத்து! இந்த உலகமே விசித்திரமான சம்பவங்கள் நிறைந்த வேடிக்கையான நாவல்தானே!”

என் மனம் வேறுபக்கம் ஓட ஆரம்பித்தது.

“பூவைப் பார்த்ததும் நம் நினைவு அதனைச் சுற்றிச் சுழன்றதே, பொருளிலிருந்துதான் எண்ணம் பிறக்குமா?...”

“இல்லை! இல்லை!!”—என்று அலறுவதுபோல் இருந்தது, விட்டு விட்டு ஊதிய இன்ஜினின் ஊதல்.

பக்கத்தில் யாரோ சத்தம் போட்டுப் பேசிக்கொண்டு வந்தனர். அவருடைய ஆறுகட்டை ‘சாரீரம்’ என் கவனத்தைத் திருப்பிவிட்டது.

“நேத்து ஒரு நல்லபாம்பு நம் வீட்டுக்குள்ளே வந்துட்டுது. நான் உடனே ‘சாமி, நாங்க உன் குழந்தைங்க அல்லவா! வருற வெள்ளிக்குப் பொங்கலிட்டுப் படைக்கிறேன்’னு வேண்டிக்கிட்டேன். என்ன ஆச்சரியம் பாருங்க, அது உடனே அந்த இடத்தைவிட்டு மாயமா மறைஞ்சுட்டுது!”...

என்னை அறியாமல் சிரிப்பு வந்தது. இவருடைய ஆச்சரியம் அறியாமையைத்தான் விளம்பரப் படுத்தியது. நீரை ஆவியாக்கி அம்பா சமுத்திரத்தையும் ஆமாதாபாத்தையும் அடுத்த அடுத்த வீடுகளாக்கிக் காட்டும் அற்புதமான ரயில் அவருக்கு வியப்பைத் தரவில்லை! போட்ட சத்தத்திலேயே பயந்து ஓடியிருக்கும் அந்தப்பாம்பு வேண்டுகோளுக்கு இணங்கி விலகிவிட்டதாக எண்ணி வியப்படைகிறார்!

நான் சிரித்தது இதற்காகக் கூட அல்ல—நச்சுப் பாம்பை நல்ல பாம்பு என்று சொல்கிறார்களே என்று எண்ணியதும் சிரிப்பு இதழில் சிந்தியது!

அறியாமை நம்மவரின் வளர்ச்சியை அடியோடு கொலை செய்துவிட்டது. வளர்ச்சி தடைப்பட்டதோடு மட்டுமா? வாழ்வையே அழிக்கும் அளவுக்கு வேரூன்றி இருக்கிறது.

என் கைகள் பரபரப்போடு பையைத் துழாவின. கையோடு வெளிவந்தது, காலையில் வந்த கடிதம். கடிதமா? கண்ணீர் என்ற மையில் தோய்த்து எழுதிய சோகச் சித்திரம்!

"அன்புள்ள கணேசனுக்கு

ஒருவேளை இதுவே உனக்கு நான் எழுதும் இறுதிக் கடிதமாக இருக்கலாம்! திகைத்து விட்டாயா, 'இறுதி' என்ற மூன்று எழுத்தைப் பார்த்து? முதல் என்பதில் எவ்வளவு மகிழ்ச்சி இருக்கிறதோ அவ்வளவு துயரம் இறுதி என்பதிலே இருக்கத்தான் செய்கிறது. உனக்கு 'இறுதி' என்பது வெறும் மூன்று எழுத்தாக மட்டுமே தெரியலாம். எனக்கோ?... இரண்டுபேரின் வாழ்வு முடிவடைகிறது என்று பொருள்!

நீ நினைக்கலாம், மனம்வெறுத்துச் சாகும்படி இப்பொழுது என்ன நடந்துவிட்டது என்று. உன் பார்வைக்கும் ஊராரின் பார்வைக்கும் நான் பழுதேயில்லாதவனாகத்தான் தோன்றுகிறேன்.

சூரியனில் உள்ள கரும்புள்ளிகள் சாதாரணமாகக் கண்களுக்குத் தெரிவதேயில்லை; ஆனால், அந்தப் புள்ளிகள் ஒரு நாள் சூரியனையே ஒளியிழக்கச் செய்து மறைத்துவிடும். மனதில் உள்ள கவலையும் அப்படித்தான்!

திகைப்பு உனக்கு இரட்டிப்பாகியிருக்கும். சிக்கலை அவிழ்க்கப்போய் அதிகமாக்கிவிட்டது போலாயிற்று! விளக்கமாகவே சொல்கிறேன். அந்த இரண்டு பேர் யார் தெரியுமா?

நானும் மாலாவுந்தான்!

கோபம் உன் மனதில் இப்பொழுது குடிகொண்டிருக்கும். 'இப்படிச் செய்யலாமா?' என்ற கேள்விக்குறியாகிவிட்ட முகத்தோடு நீ நிற்பது என் மனக் கண்களுக்கு நன்றாகத் தெரிகிறது. இப்படிச் செய்யலாமா என்றெல்லாம் கேள்வி கேட்பது எல்லோருக்குமே எளிதுதான்; ஆனால், அவ்விதம் செய்யாமலிருப்பது, அவ்வளவு சுலபமல்ல!

ஒவ்வொரு தடவையும் மாலாவை நான் பார்க்கும் போதெல்லாம் அவள் முகத்தில் ஒரு புன்னகை மின்னல் தோன்றும். மின்னல் கண் ஒளியைப் பறித்துவிடும் என்பார்கள். அது உண்மை என்று இப்பொழுதுதான் எனக்குத் தெரிகிறது. அவள் புன்னகைமின்னல் என் அறிவு ஒளியைப் பறித்துவிட்டது! குருடன் இடறி விழுவதில் குற்றம் ஒன்றும் இல்லையல்லவா?

நான் செய்தது சரியா, தவறு என்பது எனக்குத் தெரியவில்லை. ஒன்றைமட்டுந்தான் உணர்ந்தேன். என்னால் அதனைத் தவிர்க்க முடியவில்லை என்பதுதான் அது!

கடந்துபோன பரிதாபகரமான என் வாழ்வுச் சினிமாக் காட்சி ஒன்றின் வசனத்தை எழுதுகிறேன். படித்துவிட்டு

முடிவுகட்டு, நான் செய்தது சரியா, தவறு என்று!

"மணி, எனக்கு ஒரு உதவி செய்வாயா?"

"என்ன வேண்டுமானாலும் சொல் மாலா, செய்கிறேன்"

"நிச்சயமாகவா?"

"சந்தேகம் அதில் ஏன்? சஞ்சலத்தை வளர்க்காதே; சொல் மாலா!"

"உம். எனக்குக் கொஞ்சம் விஷம் எங்கிருந்தாவது வாங்கி வந்து கொடுத்துவிடு"

"விஷமா?... சரி. முதலில் இந்த வேண்டாத யோசனையை எல்லாம் தூரத்தில் விட்டுவை!"

"நான் உன்னைக் கேட்டது விஷமே தவிர, விவேகமல்ல"—சுடச்சுடப் பேசினாள்!

விளக்கு எரியும் போது நன்றாகப் பார்த்திருக்கிறாயா நீ? கோபத்தால் சிவந்த அவள் முகமும் அது போலவே அழகாயிருந்தது!

"பைத்தியமே! நான் சொன்னது என்ன, உனக்கு வெல்லம் போலவா இனித்தது? வேம்பாகத்தானே கசந்தது!—அதுவே உனக்குவிஷமாகிவிடவில்லையா?"

"விளையாடுகிறாயா, மணி? என் நிலைமை தெரிந்தால் இப்படிப் பேசுவாயா?"

அதற்குமேல் அவள் பேசவில்லை. கண்ணீர்தான் பேசிற்று!

எல்லாவற்றையும் மெதுவாகக் கேட்டு அறிந்தேன். அவளால் என்னைப் பிரிந்து வாழ்வது என்பது நினைத்துப் பார்க்கக் கூட முடியாத காரியமாகிவிட்டது. அவள் தந்தையோ, மகள் விருப்பத்திற்கு இணங்க முடியாது என்று தெளிவாகத் திட்டமாகக் கூறிவிட்டார். பெற்ற தந்தையின் நெஞ்சில் இரக்கம் பிறக்கவில்லை. ஆகவே அவள் நஞ்சின் உதவியை நாடினாள்.

அவள் என்னிடம் தன் இதயத்தையே திறந்து காட்டிவிட்டாள். சிப்பி வாயைத் திறந்து இருக்கும்போதுதான் விலை உயர்ந்த முத்து பிறக்கிறது. இதயம் திறக்கும்போதுதான் இன்பம் தரும் அன்பு உதிக்கிறது.

ஆனால் முத்தே சிப்பி இறக்கக் காரணமாகிறது. காதலும் அப்படித்தானே?...

"மாலா, நஞ்சு வாங்கி வருகிறேன்—நீ கேட்டபடி கொஞ்சமாக அல்ல—நிறைய! இரண்டு பேருக்கும் போதுமானது வாங்கி வருகிறேன். ஆனால், அதற்கு முன்பு வேதனைக் காடான இந்த ஊரை விட்டு வெளியேறிவிடுவோம். நம்மை அவர்கள் தேடாவிட்டால் தெவிட்டாத இன்பத்தைப் பெறுவோம்—கண்டுவிட்டாலோ, கையில் இருக்கவே இருக்கிறது நஞ்சு!"

இப்பொழுது சொல், நான் செய்த முடிவு தவறா?

ஊரை விட்டு இன்று இரவே செல்வதாக இருக்கிறோம். பிழைத்து இருந்தால் மறுபடியும் எப்பொழுதாவது சந்திப்போம்.


அன்பன்,

மணி."

பதினெட்டாம் முறையாக அதனைப் படித்து முடித்தேன். சன்னலுக்கு வெளியே தலையை நீட்டினேன். எதிரே வயலெல்லாம் வாழையாக இருந்தது. குலைகண்ட வாழை செத்துவிடுகிறது, கவலை கொண்ட மனமும் அப்படித்தான் மடிந்துவிடுகிறது!

...மணி என் உயிர் நண்பன். சின்ன வயதிலேயே தாய் தந்தையரைப் பறிகொடுத்தான். எங்களூரில், அவன் சிறிய தந்தை வீட்டில் வளர்ந்துவந்தான். உடல்தான் அங்கு வளர்ந்தது; உள்ளத்தை உண்டாக்கி வளர்த்தது மாலாதான்! அவள் அவன் அத்தை மகள்—முறைப் பெண். தாயில்லாதவள். அவள் தந்தை இரண்டாந்தாரம் கல்யாணம் செய்துகொண்டார். அமெரிக்கா கூட ரஷ்யாவை ஆதரிக்கலாம்—ஆனால் சக்களத்திமகள்மீது மாற்றாந்தாய் அன்பு செலுத்துவது என்பது...

ஒரே நிலையில் இருந்ததால் தானோ என்னவோ, இருவர் இதயங்களும் ஒத்து உறவாடின; திக்கற்றவர்களின் தோழமைதான் மிகவும் நெருக்கமாயிற்றே! மேலும் மாலா பிறந்தது முதல் மணிக்கே உரியவள் என்றுதான் பெரியவர்கள் முதல் சிறியவர்கள் வரை பேசினர்—பேசினரா? முடிவே செய்துவிட்டனர். 'சிமெண்ட்' ஈரமாக இருக்கும்போது அதில் ஏதாவது படிந்தால், அது காய்ந்த பின்பும் கடைசி வரையில் மறைவதேயில்லை—இளம் உள்ளத்தில் ஏற்படும் ஆசாபாசங்களும் அப்படித்தான்!



காலம் சிட்டாய்ப் பறந்தது. இந்த இடைவேளையில் மாலாவின் பாவாடை சேலையாக மாறியது. நிலையில்தான் மாறுதல்—நினைப்பில் ஒரு சிறிதும் மாற்

றமேயில்லை. மணியைச் சின்ன வயதில் அழைத்தது போலவே பெயர் சொல்லியே அழைத்தாள். அவ்வளவு தூரம் பேதம் நீங்கிய பிரேமை! பிரேமைதான் பொல்லாதது என்பது அப்பொழுது யாருக்கும் தெரியவில்லை!

அன்று, "என் மாமா சாந்தலிங்கம் பிள்ளை மாங்கல்யத்தைப் பற்றிக் கவலைப்படுகிறாரே தவிர, மனிதனைப்பற்றித் துளிக்கூட எண்ணவில்லை" என்று துடிதுடிக்கக் கூறிய மணியின் முகம் களையிழந்திருந்தது. பின்னர்க் கொஞ்சம் கொஞ்சமாக நடந்தவற்றை எல்லாம் அறிந்துகொண்டேன். அவன் மாமா, மாலாவுக்கும் மணிக்கும் மணமுடிக்கச் சோதிடரை அழைத்து சாதகம் பார்த்தாராம். மாலாவின் சாதகத்தில் கடுமையான 'செவ்வாய் தோஷம்' இருப்பதால் பொருத்தமில்லை என்று சொல்லிவிட்டாராம் சோதிடர். ஆகவே, மணிக்கு மாலாவை மணமுடிக்க இயலாது என்று தெரிவித்துவிட்டார்.

"கவலைப்படாதே மணி. நீ நெடுநாள் வாழவேண்டும் என்பதற்காகத்தான் பெரியவர்கள் சொல்கிறார்கள். மாங்கல்யத்தில் மனிதன் வாழ்வும் அடங்கியிருக்கிறதல்லவா?"

"மாலா இல்லாத வாழ்வும் ஒரு வாழ்வா? அழித்துச் செய்துகொள்ளக்கூடிய ஒரு பொருளுக்காக அழைத்தால் வராத வாழ்வைப் பாழ் செய்வதா? நாமாக ஏட்டில் எழுதி வைத்துக்கொள்ளும் ஒன்றுக்காக நாம் எண்ணுமலேயே ஏற்படும் பொன்னான வாழ்வைப் போக்குவதா? 'செவ்வாய் தோஷத்தை'ப்பற்றிக் கவலைப்படுகிற அளவுக்கு அவர்கள் முடிவால் இருவர் வாழ்வில் ஏற்படும் தோஷத்தைப்பற்றி நினைக்கவில்லை—அவர்கள் நினைக்க முடியாது. ஆனால், நினைத்து நினைத்து என் நெஞ்சு புண்ணாகிவிட்டது. இந்தப் புண்ணைத் தீர்க்கும் மருந்து எது தெரியுமா? மாலாவின் கண்ணீர்—அல்லது என் ரத்தம்!"

பேசி முடித்த அவன் போய்விட்டான். அவனைப்பற்றிய கவலை என்னை விட்டுப் போகவில்லை.

சாந்தலிங்கம்பிள்ளைக்குச் சோதிடத்தில் அசைக்க முடியாத நம்பிக்கை. ஆகவே அவரை இசையும்படி செய்வது முடியாத காரியம். காலம் என்ற சோப்பு கவலை என்ற அழுக்கைப் போக்கிவிடும் என்று என்னையே நான் தேற்றிக்கொண்டேன்—ஆனால் நூலில் படிந்துள்ள கெட்டிச் சாயத்தை எந்தச் சோப்புமே போக்க முடியாது என்பது அப்போது எனக்குத் தெரியவில்லை.

அலுவல் காரணமாக ஊரை விட்டே வந்துவிட்டேன். மணியின் பிரிவால் நான் அடைந்த துயரம் ஏட்டில் எழுதி முடியாது.

மணியிடமிருந்து எப்போதாவது கடிதம் வரும். அதில் மாலாவைப் பற்றிய செய்தி ஏது

வுமே இராது. இன்று வந்த கடிதமோ?... புண்ணின் வாய் மூடியிருந்ததால் ரணம் ஆறி விட்டது என்று நினைத்தேன். ஆனால் அது புரையோடிப் போயிருக்கிறது என்பது இப் பொழுதுதான் எனக்குத் தெரிந்தது.

"ஓடிப்போனவனைத் திரும்ப அழைத்து வந்து வேறு ஒருவருக்குத் திருமணமா செய்து கொடுக்கப்போகிறீர்கள்? அது மிகப் பெரிய பாவமல்லவா? அதைவிட ஓடிப்போனாள் என்ற வசையேமேல். ஆகவேமணிக்கே மணமுடித்து வையுங்கள்—இல்லையானால் தீங்கு ஒன்றும் செய்யாமலாவது இருங்கள்"—என்று பலவிதமாகப் பேசிப் பெரியவரை எப்படியாவது வழிக்குக் கொண்டு வந்துவிடலாம் என்று தான் ஊருக்குப் போகிறேன்.

ஆனால்?...இது என்ன?... ரயில் எங்கேயோ ஒரேயடியாகச் சாய்வதுபோலிருக்கிறதே...!

கண்ணை விழித்துப் பார்த்தேன். எதிரே இருந்த கடிகாரத்தில் மணி ஆறு! ரயிலில் நான் ஏறியபொழுதும் மணி ஆறு தான்! ஆமாம் தூங்கிவிட்டேனு, என்ன? கண்ணில்பட்ட இடமெல்லாம் படுக்கைகள். ஆச்சரியம் என் நெற்றியில் அலை அலையாகச் சுருக்கங்களை உண்டாக்கிற்று! நான் இருப்பது மருத்துவவிடுதி போலிருக்கிறதே! அங்கு வந்த நர்ஸ் மூலம் விபரம் தெரியலாயிற்று. நான் ஏறிவந்த ரயில் கவிழ்ந்துவிட்டதாம்! மண்டையில் அடிபட்டதால் அந்த மருத்துவ விடுதியில் இருக்கிறேனும்! இன்னும் ஏதேதோ சொன்னார்கள்—என் காது கேட்கவில்லை! மண்டையில் இப்பொழுதுதான் அடி விழுந்தது போலிருக்கிறது! மணியின் கதி என்னவாயிற்று?... எழுந்து நடமாட முடிந்ததும் ஊருக்குச் சென்றேன். எதிரே என்னைக் கண்ட சாந்தலிங்கம்பிள்ளை ஏதும் பேசாது தலையைக் கவிழ்த்துக் கொண்டு சென்றார்.



பிற்பகல் கழிந்தது. மணியைப் பற்றி, யாரிடம்எப்படிக்கேட்பது என்று தெரியாமல் திகைத்துக் கொண்டிருந்தேன். என் தம்பி ஓடிவந்தான்.

"அண்ணா ஒரு கவர் நீ ஊருக்கு வருவதற்கு முன்னாலேயே வந்திருக்கு, பார்த்தியா?" என்று கேட்டுக்கொண்டே என் கையில் ஒரு கடிதத்தைத் தந்தான்.

உறையின் மேலிருந்த எழுத்தைப் பார்த்ததும் என் மனம் மகிழ்ச்சியால் பூரித்தது. மணி

யின் எழுத்து! கடிதம் நான் வேலையில் இருந்த லால்குடிக்குச் சென்றுவிட்டுத் திரும்பியிருக்கிறது. கடிதத்தைப் பிரித்துப் படித்தேன்—நெஞ்சே வெடித்து விட்டது!

" அன்ப,

முன்பு குறிப்பிட்டபடி, நள்ளிரவில், இடியும் மின்னலுமாக இருந்தபொழுது நாங்கள் வெளியேறினோம். இரவில் 'சோ' என்று மழை பெய்தாலே மாலா, பயந்து சாவாள். ஆனால் அன்று எவ்வளவு உற்சாகமாக வந்தாள் தெரியுமா?... திருவாரூர் எல்லையைத் தாண்டுமுன்பே பிடித்து விட்டனர். மாலாவை என் மாமா பிடித்துப் பரபரவென இழுத்துக்கொண்டே சென்றுவிட்டார். என்னிடமிருந்து மட்டும் அவளைப் பிரிக்கவில்லை — நல்வாழ்விலிருந்தும் அவளைப் பிரித்துவிட்டார்!

தலைக்குமேல் வெள்ளம்போன பிறகு எதுவானால் என்ன என்று துணிவோடு நான் ஊர்திரும்பினேன். மாலாவைக் கடின முயற்சிக்குப் பின் கண்டேன். அவள் இம்முறை முன்போல் அழவே இல்லை!—மகிழ்ச்சியல்ல அதற்குக் காரணம்!— அறுபது நாழிகையும் அழுது கண்ணீர் வற்றி வரண்டே போனது!

மாலாவை யாரும் அடிக்கவில்லை — திட்டவில்லை — அணு அணுவாகச் சாகவைத்தனர். யாரோ, வயது சென்ற ஒரு பண்ணையாருக்கு மணமுடிக்க அவசர அவசரமான ஏற்பாடுகளெல்லாம் நடந்தனவாம்.

நான் அழைத்துச் சென்ற பொழுது அவள் கழுத்தில் கட்டிய ஒரு முழத் தாலிக்கயிற்றை அவள் தந்தை அறுத்து எறிந்து விட்டாராம்! ஆனால் அதைவிடப் பருமனான, நீளமான கயிறாக எடுத்துச் சுருக்கிட்டுக்கொண்டு சாவதை யாராலும் தடுக்க முடியாது என்று சொன்னாள்.

"உன் அப்பாதானே அப்படிச் செய்தார். ஆத்திரப்படலாமா? நம் கையே கண்ணைக் குத்திவிடுகிறது; அதற்காகக் கையை வெட்டியா விடுகிறோம்?" என்றேன்.

"நம் கைதான் என்றாலும் கண்ணில் குத்தினால் வலி ஏற்படாமலிருக்குமா? குத்தின கையை வெட்டச் சொல்லவில்லை. வழியும் நீரைத்தான் துடைக்கச் சொல்கிறேன்" அவள் கோபத்தோடு பதில் சொன்னாள்.

அவளைத் தேற்ற முயன்றேன். முடியாது என்று தெரிந்தது. ஆகவே, நானும் இந்த முடிவுக்கு வர நேர்ந்தது.



சாகத் துணிந்துவிட்டோம் நண்பா! இருவருமாக—ஒரே கயிற்றில்! ஒன்றாக வாழத்தான் அனுமதிக்கவில்லை. ஒன்றாகச் சாவதை யாராலும் தடுக்கவே முடியாது!

மணி"

பாழடைந்துபோன உள்ளூர்க் கிராம தேவதையின் கோயில் மரக்கிளையில் ஒரே கயிற்றில் இருவரும் தூக்கிட்டுக்கொண்டு செத்துவிட்டனராம்! ஐயோ! இளங்காதலர்களின் முடிவு இப்படியா இருக்கவேண்டும்?...

மாலா ஊரைவிட்டு ஓடிப்போனபொழுது பொங்கும் கடலானாளாம். அவள் தந்தை மணியுடன் அவள் வாழ்வதைத் தாம் ஒருக்காலும் ஒப்புக் கொள்ளப்போவதில்லை என்றும், அதைவிட அவளைத் தம் கையாலேயே கொன்றுவிடுவதாகவும் சொன்னாராம்.

அப்பொழுதும் அவரைச் சாந்தலிங்கம் பிள்ளை என்றுதான் சொன்னார்கள்!

"எங்கேயாவது கண்காணாத இடத்தில் சென்று இருவரும் சுகமாக இருக்கக்கூடாதா? ஏன் சாகவேண்டும்?" என்று அவரே இப்பொழுது அழுகிறாராம்!

மகள் இருக்கும்பொழுது அவளை அழவைத்தார்—செத்த பிறகு இவர் அழுகிறார்! நல்ல உலகம்! நச்சுப்பாம்பை ஏன் நல்லபாம்பு என்று சொல்கிறார்கள் என்பது இப்பொழுது நன்றாகப் புரிகிறது!





## பெரிய இடத்துப் பெண்

(ஆறாம் பதிப்பு)

**மு. கருணாநிதி**

* எழுத்து மன்னரின் கருத்துப்புதையல்!
* படிக்கப் படிக்க உள்ளத்தில் மின்னிக் கொண்டிருக்கும் தன்மையுடையது!
* அவ்வளவும் கருத்துப் புதையல்கள்!
* மூன்று நிற மேலட்டை!
* புத்தகம் மிக அழகு!

குறைந்த விலை
**0—8—0**

வியாபாரிகட்குத் தக்க இலாபமுடன் எங்கள் செலவிலேயே அனுப்பி வைக்கிறோம்.

விபரங்கட்கு:
திராவிடன் பதிப்பகம்,
P. B. No. 18, வேலூர், N. A.



# மனோஞ்சிதம்

தங்கமணி

## 5. மனத்தை நடுங்கச் செய்த மகா பயங்கரம்!

திடீரென்று வானகம் கறுத்தது! வையகம் கறுத்தது! இயற்கையின் இந்தத் திடீர் ஜால வித்தையைக் கண்ட கிழவனும் மனோஞ்சிதமும் திகைத்தார்கள். ஆச்சரியத்தில் ஆழ்ந்து போனார்கள்! இருவரும் நிமிர்ந்து வானத்தைப் பார்த்தார்கள். வானமெங்கும் ஒரே கருமேகப் படலங்கள் மண்டிக் கிடந்தன. எங்கும் கறுமை! வெண்ணிலவை அள்ளியள்ளிப் பொழிந்துகொண்டிருந்த பொன் நிலா எங்கே இருக்கிறது என்றே தெரியவில்லை.

"தாத்தா, எங்கே நிலாவைக் காணவே காணோமே!"...

"ஹூம்!... எந்த மேகத்திற்குள் பதுங்கிக்கொண்டதோ? கண்மணி, மனிதன் என்ற வானத்தில், அன்பு என்ற நிலா, பணம் என்ற கருமேகத்தால் இப்படித்தான் அடிக்கடி மறைக்கப்படுகின்றது. அதனால், ஏழை என்ற உலகம் இருளடைந்து விடுகிறது. இந்த இருளைத் துடைக்க, நிலாவெளிச்சம் தேவை. நிலாவெளிசசம் தேவையென்றால், நிலாவை மறைத்திருக்கும் மேகம் அகல வேண்டும், அகலவேண்டுமானால் புரட்சி என்ற காற்று வீச வேண்டும்..." கிழவன் தொடர்பின்றி ஏதேதோ பேசினான்.



பயங்கரச் சூறுவளியாக உருமாறியது!

அடடா! இத்தனை சீக்கிரம் எத்தனைப் பயங்கரம்!

"அய்யோ, மனோரஞ்சிதம்! ஓடி வந்துவிடு!"

"தாத்தா! வா, பங்களாவிற்குள் ஓடிவிடுவோம்!" — மனோரஞ்சிதம், கிழவனின் கையைப் பிடித்திழுத்துக்கொண்டு பங்களாவை நோக்கிப் பாய்ந்து பறந்தோடினாள். இப்போதுதான் ஒரு பேரதிசயம் நடந்தது! பயங்கர சம்பவம் நடந்தது! 'உய், ஊய்ய்!...' என்று சீறிச் சாடிய சூறுவளிக் காற்று மனோரஞ்சிதத்துடன் தட்டுத் தடுமாறி ஓடிய கிழவனைமட்டும் குபீரென்று பந்துபோல் தூக்கி வீசிஎறிந்தது வான வெளியிலே! மனோரஞ்சிதம் திடுக்கிட்டுக் கதிகலங்கிச் சட்டென்று திரும்பிப் பார்த்தாள்.

அதோ!... அதோ!... வான வெளியிலே, மேகமண்டலங்களைக் கிழித்துக்கொண்டு, சுருண்டு முடங்கிக் கிறுகிறுகிர்ரெனச் சுழன்று மேலே மேலே—இன்னும் மேலே மேலே போய்க்கொண்டே இருக்கிறானே! ஆ...அய்யோ!

இந்தத் திடீர்ப் பயங்கரக் காட்சியைக் கண்ட மனோரஞ்சிதத்திற்குத் திகீரென்றது! பகீரென்றது! மயக்கம் வரும்போல் இருந்தது!

மனோரஞ்சிதத்திற்குக் கிழவனின் அந்தப் பேச்செல்லாம் ஒன்றுமே விளங்கவில்லை. அவள் 'பெப்பே...பே!..." என்று விழித்தாள்.

"தாத்தா என்ன சொல்கிறீர்கள்? ஒன்றும் புரியவில்லையே!"

"ஆமாம், என் செல்வமே உனக்குப் புரியாதுதான். புரிவதற்கு இன்னும் கொஞ்சம் வயது ஆகவேண்டும். அப்போது நீ புரியும் இந்த விஷயங்களைத் தெரிந்துகொள்ளத்தான் வேண்டும்..."—கிழவன் பேசிக்கொண்டிருக்கும்போதே திடீரென்று படீரென்று இடி முழங்கியது! சுளீரென்று மின்னல் வெட்டியது! ஆஸ்ஸ்... என்று, ஊஸ்ஸ்... என்று காற்று சீறியது! சோ...என்று, ஹோ... என்று பெருமழை சாடியது! சுழற் காற்றும் பெரு மழையும் சேர்ந்து மாபெரும் புயலாக—

"தாத்தா!... என் அருமைத் தாத்தா!... ஓ... தாத்...தா... ஆ...!"—வானவெளியில் மேலே மேலே உருண்டு, புரண்டு போய்க்கொண்டே இருக்கும் அந்த அன்புக்கிழவனை நோக்கிக் கையேந்திக் கதறினாள் மனோரஞ்சிதம்! உயிர்பதைக்க மீண்டும் மீண்டும் கூறினாள்!

"...தாத்தா! தாத்தா!...தா... த்...தா!...

தன் ஆசை அணைப்பில் சுருண்டு படுத்துறங்கிக்கொண்டிருக்கும் மனோரஞ்சிதத்தின் திடீர்ப் பிதற்றலைக் கேட்ட சாமந்தியம்மாள் திடுக்கிட்டுப் போனாள். பறக்கத் துள்ளித் துடித்து விழித்தெழுந்தாள்! தூக்கமயக்கத்தில்இன்னுங்கூடத் 'தாத்தா, தாத்தா' என்று பிதற்றிக் கொண்டிருக்கும் தன் அருமை மகள் மனோரஞ்சிதத்தை இரண்டு கைகளாலும் பூப் போல வாரியெடுத்தாள்; மார்போடு அணைத்துக்கொண்டாள்.

"அடி என் தங்கமே! ஏதாவது கனவு கண்டாயா?" என்று மனோரஞ்சிதத்தை இறுக அணைத்துப் பதைபதைத்துப் பரபரப்புடன் கேட்டாள் அம்மா. மனோரஞ்சிதம் பதில் ஒன்றும் சொல்லவில்லை. அவள் சட்டென்று திரும்பினாள்; சன்னலுக்கு வெளியே பார்த்தாள். தோட்டத்தில் மழையுமில்லை; புயலுமில்லை. இடியுமில்லை; மின்னலுமில்லை. தென்றலும் தேனிலவுந்தான் கிளுகிளுத்துக்கொண்டிருந்தன!

மனோரஞ்சிதத்தின் மனம் கிறுகிறுத்தது. அறிவு குறுகுறுத்தது. கொட்டு கொட்டு என்று வியர்வையாய்க் கொட்டியது. அவள் நெட்டுயிர்த்தாள், அம்மாவின் தோள்மீது தலையைச் சாய்த்தாள், கண்களை மூடினாள், பெருமூச்சுவிட்டாள். அவளின் மூடிய கண்களிலிருந்து இரண்டு சொட்டு நீர்த்துளிகள் உருண்டு விழுந்தன. அம்மா மறுபடியும் கேட்டாள்.



"ஏம்மா, கனவா கண்டாய்?"

"ஆமம்மா" என்றாள் மனோரஞ்சிதம்.

★

பல நாட்கள் விழுந்தடித்துக் கொண்டு ஓடி மறைந்தன! ஒரு நாள், நடுப்பகல் வானம் மப்பும் மந்தாரமுமாய்க் கிடந்தது. வையகமெங்கும் மங்கிய நிழல் படர்ந்திருந்தது. குளிர் காற்று மெல்ல நெளிந்து கொண்டிருந்தது. தோட்டத்தில் வட கோடி எல்லையிலுள்ள தாமரைக் குளக்கரையிலிருந்த ஒரு பெரிய பாறையின்மீது கவலையே உருவாய் உட்கார்ந்துகொண்டிருந்தாள் மனோரஞ்சிதம். அவளுடைய சோக உருவத்தின் பிம்பம் குளத்துப் பன்னீர்த் தண்ணீரில் பிரதிபலித்துக் கொண்டிருந்தது. சிறிது நேரம் மௌனமாகவே நகர்ந்தபின் "மனோரஞ்சிதம்!"— என்று சாந்தமாக அன்பாகப் பதட்டமின்றி எழும்பிய குரலைக் கேட்டதும், மனோரஞ்சிதம் சடக்கென்று திரும்பிப் பார்த்தாள்.

சிரித்த முகத்துடன் அருகில் நின்றுகொண்டிருந்தான் ரோகிக் கிழவன்! இந்தச் சமயத்தில் அந்த கிழவனைக் கண்டதும் மனோரஞ்சிதத்தின் உள்ளம் ஒரு குதி குதித்தது! அவள் 'கனவோ?' என்ற சந்தேகத்துடன் கண்களைத் தேய்த்துக் கொண்டு கிழவனை உற்றுப் பார்த்தாள். கன்னங்களைக் கிள்ளிப் பார்த்தாள்.

"செந்தமிழே! என்ன விழிக்கிறாய்?"

"தாத்தா, இது கனவல்லவே? பிரமையில்லையே?..."

"கண்மணி, இது கனவுமல்ல, கற்பனையுமல்ல. உண்மையே!"— கிழவன் சகஜமாகச் சிரித்தான். மனோரஞ்சிதமும் சந்தேகம் நீங்கிப் பாய்ந்தோடினாள். மறுகணம் அவள் கிழவனை அப்படியே கட்டிப் பிடித்துக் கொண்டுதானிருப்பாள். ஆனால் கிழவன் சட்டென்று சற்று விலகி நின்றுகொண்டான்! மனோரஞ்சிதம் ஸ்தம்பித்து நின்றுவிழித்தாள்!

"கண்மணி! என்னைத் தொடாதே! என்னைத் தொட்டால்?...என் உடலை ஆக்கிரமித்துக்கொண்டிருக்கும் இந்தப் பயங்கரத் தொத்துநோய் உன் அழகிய உடலையும் ஆக்கிரமித்துக்கொள்ளும்! வேண்டாமம்மா. என்னைச் சத்தியமாய்த் தொடாதே! இந்த ஒரே நோய் உன் தங்கமேனியை மங்க வைத்துவிடும். என்னைத் தொடாதேம்மா. எட்டவே நின்று பேசு!" என்று கல்லும் கரையச் சொல்லிக் கண்ணீர் உகுத்துநின்றான், அன்பு உள்ளமும் அசங்கிய உடலும் கொண்ட அன்புக் கிழவன்! மனோரஞ்சிதம் கண்ணீர் வடித்தபடியே கல்லாய்ச் சமைந்து நின்றாள்.

சிறிதுநேர மௌனத்திற்குப் பிறகு—

அன்புக் கிழவன் மனோரஞ்சிதத்தின் மனக் கலக்கத்தைக் கண்டு மனங்கலங்கினான்! "கண்ணின் மணியே! என் கண்ணான தெய்வமே! செந்தமிழ்ச் செல்வமே! அழாதேம்மா, அழாதே! இதோ பார்! உனக்குத் தங்கச் சங்கிலி வாங்கி வந்திருக்கிறேனே!" என்று சொல்லிக்கொண்டே தன் மடியில் பத்திரமாய்த் திணித்து வைத்திருந்த தங்கச் சங்கிலியை வெளியே எடுத்தான். அவ்வளவு தான்! மறுவினாடி—

"திருடன்! திருடன்! பிடி! உதை! குத்து! அடி!" என்ற திடீர்க் கூச்சல் பூந்தோட்டத்து அமைதியை விரட்டியது! பங்களாத் தோட்டத்து வாசலில் நின்று 'குய்யோ, முறையோ' என்று கூவிய தோட்டக்காரனின் கூச்சல் பங்களாவிற்குள் புகுந்து பரவி அலைபாய்ந்தது! ஓரிரண்டு வினாடிகளுக்குள் பங்களாவிற்குள்ளிருந்து தடியும், கழியுமாய்க் குமாரலிங்கமும், சாமந்தியம்மாளும் நாலைந்து தடியர்களுடன், கிழவனை நோக்கிக் காட்டுத்தனமான கூச்சலிட்டுக்கொண்டே அரக்கத்தனமாகப் பாய்ந்தோடி வந்தார்கள்! அதன்பின்—?


## புதிய இலக்கிய விருந்து

★

| | | |
|---|---|---|
| நினைவுச் சின்னம் | இளமைப்பித்தன் | 1—0—0 |
| கடல் முத்து | எஸ். ஆறுமுகம் | 1—0—0 |
| உலக அரங்கில் | டி. கே. சீனிவாசன் | 1—0—0 |
| தபாலாபீஸ் விநோதங்கள் | க. சண்முகசுந்தரம் | 0—8—0 |
| இலக்கியச் சந்தையில் | மு. அண்ணாமலை | 0—8—0 |
| கம்பன் கெடுத்த காவியம் | ,, | 0—4—0 |
| வீடும் விளக்கும் | சுகி | 0—8—0 |
| தாஜ்மஹால் | நா. பாண்டுரங்கன் | 0—8—0 |
| கொடி முல்லை | வாணிதாசன் | 0-12—0 |
| வருங்காலத் தமிழகம் | கா. அப்பாத்துரை | 0-12—0 |
| இந்திய மொழிச் சிக்கல் | ,, | 2—8—0 |
| கழைக்கூத்தியின் காதல் | பாரதிதாசன் | 1—0—0 |

பொன்னி லிமிடெட், — சென்னை-21.

# 29ம் எண் படுக்கை

எஸ். ஆறுமுகம்

காப்டன் எபிவென்ட் வீதியில் போய்க் கொண்டிருந்தபோது எல்லாப் பெண்களும் அவனையே வெறிக்கவெறிக்க பார்த்தார்கள். அவன் குதிரைப் படைகளின் தலைவன்; மிகவும் அழகானவன். அவனுக்குத் தன் அழகில், ஆகிருதியில், மீசையில் ஒரு பெருமை என்றும் உண்டு.

எபிவென்டிற்கு அழகிகள் என்றால் உயிர். ஒவ்வொரு நாளும் அவனுக்குப் பிடித்த அழகிய பெண்ணுடன்தான் இரவு உணவு உண்பான்; மறுநாள் காலையும் அவளுடன்தான் விடியும். அவனுடைய நண்பர்கள் தம் காதலிகளைக் காப்டன் பார்க்க விரும்ப மாட்டார்கள்; அவன் மீது அவர்களுக்கு அணைகடந்த ஆத்திரம் என்றும் இருந்தது. நகரத்து வியாபாரிகளும் அவனை வெறுத்தார்கள்; தூற்றினார்கள்; அவனைக் கண்டு அஞ்சினார்கள். காப்டன் எபிவென்ட் தெருவில் நடக்கும்போது, வியாபாரிகளின் மனைவியர்கள் அவனைக் கண்ணாடி ஜன்னல்கள் வழியாகப் பார்த்துப் பார்வைகள் பரிமாறிக் கொள்ளுவார்கள். பேசும் வார்த்தைகளை விட வலுப்பெற்றவையல்லவா அந்தப் பார்வை மாற்றங்கள்! அவைகளிலே வேண்டுதல், இணக்கம், விருப்பம், .பதில் எல்லாம் இருக்குமே!

மொத்தத்தில் படைத்தளபதி எபிவென்ட் என்றால் பொது மக்கள் அனைவரும் அஞ்சினர். அவதூறு பேசினர். 'இந்தப் பயல்களின் பட்டாள அணிவகுப்பைப் பார்ப்பவர்கள் நிச்சயம் மூடர்களாகத்தான் இருக்கவேண்டும்' என்று அவர்கள் கருதினர்.

இருந்தும், எபிவென்டின் பெயரும் புகழும் பிரெஞ்சுப் படையில் படர்ந்து பரவிப் பலம் பெற்றன. அவன் படை அன்று ரூவன் வந்து சேர்ந்தது. நகரத்தில் தலைவனின் பெயர் காட்டுத்தீயாக எல்லோருக்கும் எட்டிவிட்டது. தினமும் மாலையில் 'காமெடி'யில் காப்பி, பிராந்தி அருந்தினான்; தன் எழிலை, பிம்பத்தை அனைவரும் தெரிந்து கொள்ளும் அளவிற்கு அவன் நகர் வீதிகளில் நடமாடினான்.

"அதோ, காப்டன் எபிவென்ட்! ஐயோ, அவன் பெரிய ராஸ்கல், பெண் லோலன்." எங்கும் எதிரொலித்தன குரல்கள்.

அவனைச் சந்திக்கும் இளநங்கையர் சற்று ஒதுங்கி, உதட்டோரத்தே முறுவலை இழையோட விட்டு இன்ப ஊறல் பெற்றவர்களாக விலகிச் சென்றார்கள்; தலைகள் சற்றே தாழ, உதடுகளில் நகை நடமாட நிற்கும் அவர்கள் அவன் எதிரில் தங்களைக் கவர்ச்சியுடைவர்

களாகக் காட்டிக்கொண்டு, அதே கணம் அவனும் தங்களை கடைக் கண்ணால் பார்ப்பதில் பரவச மெய்தினர்.

நகரத்து விலைப் பெண்க ளிடையே தளபதி எபிவென்டை அடைவதில் பலத்த போட்டி இருந்தது. அவர்கள் எல் லோரும் 'பாயெல்டோமாலி'ல் கூடினார்கள், அழகுப் பதுமை களாக, கவர்ச்சிக் கனிகளாக. காதல் போட்டி—காதல் பரீட்சை அது.

ஒருநாள் மாலை அழகி இர்மா குறித்த ஹோட்டலின் முன் வண்டியைவிட்டு இறங்கினாள். அவள் 'உங்களை எப்போது காணமுடியும்?' என்ற குறிப்புச் சீட்டைக் காப்டன் எபிவென் டிற்கு அனுப்பிவிட்டு, பதிலுக் குக் காத்திருந்தாள். அவன் 'உடன் வருக' என்று பதில் அனுப்பினான்.

அவள் அவனைப் பார்த்தாள்; தான் ரசிகப்பொருளாகி, அவனை ரசிக்கச் செய்தாள்; அவள் போதையுடன் முறுவலித்தாள். அன்று அவன் அவள் காதல னானான்! தங்கள் காதலின் வெற்றித் திறமையைக் குறித்து இந்த 'ஜோடி' பெருமிதம் பொங்கப் பேசிக்கொண்டார்கள்; அதில் அவர்கள் ஆனந்தம் கொண்டனர். இவர்களைப்பற்றி அதிகமாக ரூவன் பிரதேசத்தில் யாரும் பேசினதாகத் தெரிய வில்லை. ஆனால் அவர்கள் அத்தனைபேருடைய கண்களும் தன்மீதுதான் பொதிந்துள்ளன என்பதை அவன் மறக்கவில்லை. அதே தருணத்தில், அழகி இர் மாவைத் தான் அடைந்ததில் உள்ளூறப் பெருமிதம் கொண் டான் அவன் என்பதையும் மறுக்கமுடியாது.

ஆனால் அப்பொழுது யுத்த முரசு ஒலித்தது. காப்டன் எபிவென்ட் படை யுத்தகளத் துக்கு முதலில் போகவேண்டும் என்பது மேலிடத்து உத்தரவு. இர்மா மனம் நொந்தாள்; அழு தாள். அன்று இரவு பூராவும் அவர்களுக்குத் தூக்கமில்லை!

வாள், சிவப்பு அணிகள், யுத்தஅரங்கச் சின்னங்கள், தொப்பி அனைத்தும் அறையில் பரப்பிக்கிடந்தன. தளகர்த்தன் புறப்படத் தயாராகிக்கொண் டிருந்தான். இர்மா அவிழ்ந்து புரண்ட கேசத்துடன், சஞ்சலம் அப்பிய முகத்துடன் ஆபீசரின் கழுத்தைச் சுற்றித் தன் மெல்லிய கைகளைச் சேர்த்த வண்ணம் கண் கலங்க நின்றாள்.

"இர்மா, என் அன்பே, அழாதே; நான் போகவேண்டி யது மிக அவசியம்."

கண்ணின் ஒரு கோடியில் துளித்துக்கிடந்த மணிகளை விரல் நுனியால் துடைத்துக் கொண்டான் எபிவென்ட். பகலில் அவர்கள் பிரிந்தனர். காதலனைத் தொடர்ந்த இர்மா வழியனுப்பித் திரும்பும் நிலையில் அவள் அவனுக்கு முத்த மிட்டாள். குதிரைப்படை புறப் பட்ட முரசொலி முழங்கிற்று.

யுத்தத்தில் அவர்கள் படை வெற்றிபெற்றது. படைத்தலை வனின் தோள்வலியும் நாட்டுப்

பற்றும் முன் நின்றன அல்லவா? காப்டன் எபிவென்டுக்கு மரியாதைச் சின்னம் பதித்த பதக்கம் பரிசளிக்கப்பட்டது. சண்டை முடிந்தது; அவன் ரூவனுக்குத் திரும்பினான் படையுடன். உடனே தன் காதலி இர்மாவைப் பற்றி விசாரித்தான்; யாரும் அவளைப் பற்றிச் சரியான தகவல் தரவில்லை. பிரஷிய மேஜருக்கு அவள் மணம்செய்விக்கப்பட்டாள் என்பதாகச் சிலர் தெரிவித்தனர். அவள் தன் பெற்றோர்களுடன் கிராமத்தில் தங்கியிருப்பதாக மற்றும் சிலர் கூறினர்.

அவன் வேலைக்காரனை அனுப்பி மேயரின் அலுவலகத்தில் மரணக்கணக்கைப் பரிசீலிக்கச் செய்தான். அவன் காதலியின் பெயர் அதில் காணப்பெறவில்லை.

அவனுக்கு ஆத்திரம் மூண்டது. எதிரிகளை அவன் வீணாகச் சந்தேகித்தான், அவர்கள் தாம் அந்தக் காதல் பதுமையின் மறைவிற்குச் காரணமாயிருக்கவேண்டுமென. 'அவர்களை அடுத்த யுத்தத்தில் செம்மையாகக் கவனித்துக்கொள்கிறேன்' என்று தனக்குள் உறுமிக்கொண்டான்.

ஒருநாள் காலையில் சாப்பிட அறைக்குள் நுழையும்போது கூலி ஒருவன் அவனிடம் கடிதம் ஒன்றை நீட்டிச் சென்றான். பிரித்த கடிதத்தில் விரிந்தது பார்வை.

"அன்புக் காதலரே,

உடல் மிக மிகக் கெட்டுவிட்டது; ஆஸ்பத்திரியில் இருக்கிறேன். என்னைக் காண நீங்கள் வரமாட்டீர்களா? எனக்கு அது எவ்வளவோ மகிழ்ச்சி தரும்!

இர்மா."

காப்டனின் முகம் மாறியது. இதயம் நெகிழ்ந்தது. 'பாவம், இர்மா! இதோ, புறப்பட வேண்டும்!'

எபிவென்ட் நண்பர்களிடம் இர்மாவின் உடல் நிலை பற்றிய செய்தியை வருத்தத்துடன் சொன்னான்; சடுதியில் அவளைக் காண புறப்படுவதையும் ஒளிக்கவில்லை; பிரஷ்யர்களை வீணே சந்தேகித்தது தவறு என்றும் கருதினான். கையில் கொஞ்சம் கூடப் பணமின்றி பாவம், அவள் அலைந்து வறுமையில் தவித்திருக்கிறாள் போலிருக்கின்றது!

விரைந்து உடை உடுத்துக்கொண்டான்; சுழன்ற வாளையும் இடையில் செருகினான்; பெல்ட்டைத் தளர்த்திவிட்டு, தன்னை இளைத்திருப்பதாகத் தோன்றச் செய்தான். நகரத்து ஆஸ்பத்திரியை நோக்கி விரைந்தான்.

போனவேகத்தில் அவன் ஆஸ்பத்திரியினுள் அடிவைக்க முடியவில்லை. டைரக்டரிமிடருந்து இணக்கம் வேண்டுமென்று கூறினான் அந்த வார்டுக்குரியவன். காத்திருக்கவேண்டி வந்தது ஒப்புச்சீட்டுக்கு. அவன் அறையில் மனம் புழுங்கிக்கொண்டிருந்தான், உள்ளே

மாண விளையாட்டுப் பட்டியலில் தத்தளித்துக்கொண்டிருந்த நபர்களைப்பற்றி நினைத்தபோது.

உத்தரவு சம்மதம் கூறியது. பையன் வழிகாட்டினான். தொடர்ந்தான் எபிவென்ட். நடக்கும் நிலையிலே துளிச் சத்தம் எழவில்லை. நோய், மருந்து இவற்றின் கெட்ட வாடை எங்கும் சூழ்ந்திருந்தது. நோயாளிகளின் முனகல் சப்தம் ஆஸ்பத்திரியின் அமைதிக்குப் பங்கம் விளைத்தது. உறங்கும் அறைகள் அவன் நோக்கில் தெறித்துவிலகின. குணம்பெற்றவர்கள் நாற்காலிகளில் பழுப்பு நிற உடையுடன் வீற்றிருந்தனர்.

வழிகாட்டி ஒரு இடத்தில் நின்றான். "அதோ அந்த அறை. 29-ம் எண் படுக்கை" என்றான்.

நடந்தான். படுக்கைத் துணிமணிகளைத் தவிர்த்து வேறெதுவும் அவன் காணவில்லை. தலையும் மறைக்கப்பட்டு இருந்தது. அந்நிலையில் அவனால் அவன் காதலியை அடையாளம் புரிந்து கொள்ள இயலவில்லை.

சங்கடப்பட்டவாறு உடைவாளை ஒரு கையில் அணைத்துக் கொண்டு, மற்றொன்றில் தொப்பியை ஏந்தியபடி அவன் மெல்ல "இர்மா" என்று அழைத்தான்.

அந்தப் படுக்கையில் கணத்தில் திடீரென்ற ஒரு சலனம் பிறந்தது; அவன் துணைவியின் முகம் தோன்றியது. ஆனால் அந்த முகம் பூராவும் மாறிவிட்டிருந்தது, சாம்பிவிட்டிருந்தது. அவளருகே நின்ற நர்ஸ் அவளுக்கு மருந்து கலக்கிக் கொடுத்துச் சென்றாள்.

அவள் நெடுமூச்சுவிட்டாள். உணர்ச்சிக்கு அணைபோல முடியாதவளாக அவள் "எபிவென்ட்! அன்பரே... நீங்கள் தானே...... ஆம்; நான் கொடுத்து வைத்தவள்... மிகவும் மகிழ்ச்சியடைகிறேன்..." என்று குரல் கம்ம வெளியிட்டாள். கண்ணீர் கன்னங்களின் கீழே ஓடிற்று.

வேலைக்காரன் நாற்காலி கொண்டுவந்தான்.

"அமருங்கள்" என்றாள் அவள்.

காப்டன் அமர்ந்தான். அவன் அவளைப் பார்த்தான். அழகுத் திரள்குமாரியாக விட்டுச்சென்ற தன் காதலி, அழகு முழுதும் சிதைந்து உருமாறிவிட்டிருக்கும் அந்தப் பரிதாபகரமான நிலையைப் பார்த்தான்.

"உன் உடம்பு இப்படி ஆகியிருப்பதற்கு என்ன காரணம்?"

"பாருங்கள், அதோ கதவில் எழுதியிருக்கிறதே."

"என்ன, உடலுறவு வியாதியா? ஐயோ... உனக்கு அது எப்படி ஒட்டிவிட்டது?"

"பிரஷ்யர்கள் அதற்குக் காரணம். என்னை அவர்கள் பலவந்தத்திற்கு ஆளாக்கிப் பாழாக்கிவிட்டார்கள்" என்று அவள் விம்மினாள்.

அவனால் வாய் திறக்கமுடியவில்லை. பிற நோயாளிகள் அவனையே ஆழ்ந்து பார்த்திருந்தார்கள்.

"இந்த நோயினின்றும் நான் மீண்டும் பிழைப்பேன் என்று

எண்ணவில்லை. நோய் பொல்லாதது என்கிறார் டாக்டர்”

ஆபீசரின் மார்பை அலங்கரித்த வெற்றிப் பதக்கத்தைக் காணநேர்ந்ததும், “ஓ, நீங்கள் பதக்கம் பெற்றுவிட்டீர்களா? இப்பொழுது என் நெஞ்சம் எத்தனை நிம்மதி பெறுகிறது தெரியுமா? ஆஹா, உங்களை இப்பொழுது தழுவிக்கொண்டால்..” என்று நிறுத்தினாள் இர்மா.

அவளின் அடங்காத ஆசையைக் கேட்டதும் காப்டனுக்குப் பயமும் நடுக்கமும் உடலில் பரவின. விரைவிலேயே அவ்விடத்தைவிட்டு விடுபட அவன் எண்ணினான்; தனிமை வேண்டியிருந்தது. மீண்டும் இந்தப் பெண்ணைப் பார்க்கவே கூடாது என்றும் தீர்மானித்துக்கொண்டான்.

“உன் உடம்பை நீ சிறிதும் கவனிக்கவில்லை என்பது நன்றாகப் புரிந்துவிட்டது.”

இர்மாவின் கண்ணோரத்தில் பொறிமின்னவிட்டது.

“அப்படியல்ல; என்னுள் உதித்த ஆசையை நிறைவேற்றினேன். ரூவனிலிருந்த உங்கள் எதிரிகளை என்னால் இயன்றவரை கெடுத்துவிட்டேன். ஆதலால் என்னைப்பற்றி—என் உடலைப் பற்றிச் சற்றும் கவலை மூளவில்லை”



"அதுவரை நீ கொஞ்சம் நன்மைதான் செய்திருக்க வேண்டும்."

அவள் கன்னங்களில் செவ்வரி படர்ந்தது.

"ஆமாம்; என்னால் கெடுக்கப்பட்ட அவர்களில் கட்டாயம் ஒன்றுக்கு மேற்பட்டவர்கள் மாண்டிருப்பார்கள். என் வஞ்சத்தைத் தீர்த்துக்கொண்டேன்."

"நன்று. நான் அவசரமாக இங்கிருந்து புறப்படவேண்டும். ஏனெனில் நான் உடனடியாக எங்கள் ஆபீசரைச் சந்திக்க வேண்டும்" என்று கூறி எழுந்தான் காப்டன் எபிவென்ட்.

"அன்பரே, இதற்குள் புறப்படுகிறீர்களா? அன்று தான் என்னை அனாதரவாக விட்டுப் பிரிந்தீர்கள்! அபூர்வமாக இன்று வந்த நீங்கள் உடனே புறப்பட வேண்டுமா?"

அவள் வார்த்தைகள் அழுகைக் குரலையும் மீறி ஒலித்தன.

அவனுள்ளத்தில் எப்படியும் அங்கிருந்து போய்விட வேண்டுமென்ற தீராத முடிவு திடம் பெற்றுவிட்டது.

"இர்மா, உன்னைச் சந்திக்கத்தான் பதறி வந்தேன். குறித்த நேரத்தில் நான் எங்கள் பெரிய அதிகாரியின் அலுவலகத்தில் ஆஜராக வேண்டும்..."

"உங்கள் படைமேல் அதிகாரி இன்னும் அந்தக் கர்னல் ப்ரூன் தானே?" என்றாள் அவள்.

"ஆம்; அவருக்கு இருமுறை காயமேற்பட்டது."

"உங்கள் தோழர்கள்......! அவர்களில் யாரும் கொல்லப்பட்டுவிட்டார்களோ?" அவள் மீண்டும் தொடர்ந்தாள்.

"ஆம்; சாபர்ட், போலி, டிகார்ஸன், காரவன், பாசபில்... இவர்கள் மாண்டனர். ஸாஹெலுக்குப் புஜம் போய்விட்டது. கௌர்வசனுக்குக் கால் துண்டிக்கப்பட்டது. சந்தாலுக்கு வலது கண் அற்றுவிட்டது..."

இர்மா உற்சாகத்துடன் கவனித்துக்கொண்டிருந்தாள்.

"அன்பரே, நீங்கள் புறப்படுவதற்குள் என்னை ஓர் முறை முத்தமிடுங்கள்"

அவனுக்கு அருவருப்பு ஊறியது. அதற்குள் அவள் அவனைச் சுற்றிலும் கரங்களைக் கோர்த்து அணைத்துக் கொண்டாள். அவள் அவனுடைய நீல



நிறமேலணியில் மாறி மாறி முத்தம் தந்தாள்.

"நீங்கள் மறுபடியும் வர வேண்டும். அப்படி வருவதாக வாக்களியுங்கள்."

"நிச்சயம் வருகிறேன்"

"என்று? வியாழனன்று முடியுமா?"

"ஆகட்டும்"

"வியாக்கிழமை பகல் இரண்டு மணிக்கு..."

"ஆம்; வியாழக்கிழமை பகல் இரண்டு மணிக்கு வருகிறேன்"

"உறுதி தானே"

"உறுதி"

"காதலரே, வணக்கம்"

"வணக்கம்"

"நல்லிரவு"

"நல்லிரவு"

பறந்தோடிய அவன் வீதிக்கு வந்து சேர்ந்தவுடன் பெருமூச்சைக் கொட்டினான். வெட்கத்தில் அவன் உடல் குறுகி விட்டது.

அன்று சாயங்காலம் "உங்கள் இர்மாவுக்கு உடல் எப்படியிருக்கிறது?" என்று விசாரித்தார்கள் அவன் நண்பர்கள்.

"அவள் நலம் பெரிதும் பாதித்துவிட்டிருக்கிறது. இருதயப் பைகளில் பெருத்த ஊனம் ஏற்பட்டிருக்கிறது"

அடுத்த நாள் உணவு அருந்துகையில் காப்டனைப் பற்றி ஒரே கலாட்டாப் பேச்சாக இருந்தது.

இர்மாவுக்கும் பிரஷியர்களின் மேஜருக்கும் முன்னரே திருமணம் மறைவாக நடந்ததாகச் செய்தி அன்று அவனுக்கு எட்டியது.

எட்டுநாட்களாக இர்மாவைப் பற்றிய பேச்சுக்கள் நூதனம் நூதனமாக அவனுக்குக் கிட்டின. தபால்கள், தூதர்கள், வைத்தியர்கள் இவர்கள் மூலம் அவன் செய்திகளை அறிந்து கொண்டான்.

கடைசியில் கர்னலிடமிருந்து அவனுக்குக் குறிப்பொன்று பறந்து வந்தது. அதில் "காப்டனின் நடவடிக்கைகள் விசித்திரமாக இருக்கின்றன. வருந்துகிறேன்" என்று எழுதப்பட்டிருந்தது.

பன்னிரண்டு நாட்கள் சென்ற பிறகு, இர்மாவிடமிருந்து நினைவுக் கடிதம் காப்டனுக்கு வந்தது. கோபத்தில் அதைக் கிழித்து எறிந்தான்; அதற்குப் பதில் எழுதவில்லை.

ஒருவாரம் போய் மறுபடியும் அவள் தன் உடல் நிலை படுமோசமாகி விட்டதென்றும், அவனைக் காண விழைவதாகவும் குறிப்பிட்டுக் கடிதம் விடுத்திருந்தாள் இர்மா.

அதற்கும் அவன் பதில் பேசவில்லை. சில நாள் கடந்தபிறகு ஆஸ்பத்திரிப் பாதிரியிடமிருந்து குறிப்பு ஒன்று காப்டன் எபிவென்டிற்கு வந்தது.

"இர்மா மரணப் படுக்கையில் உழல்கின்றாள். அவள் தங்களை வருமாறு கெஞ்சினாள்."

பாதிரியின் விண்ணப்பத்தை அவனால் மறுக்க முடியாது. துளும்பும் ஆத்திரத்துடன் தளர்ந்த நெஞ்சுடன் நோய் விடுதியில் அடிமிதித்தான் அவன்.

அவள் முழுக்க முழுக்க மாறிப்போனதைக் காணும வில்லை எபிவென்ட். அவள் தன்னை ஏமாற்றிவிட்டதாக வருந்தினான்.

"என்னை ஏன் அழைத்தாய்?"

"நான் வாழ்வின் இறுதிப் பகுதியில்தத்தளிக்கிறேன். உங்களிடம் பிரிவுவிடை கூறவே உங்களை நான் அழைத்தேன்"

அவன் நம்பவில்லை.

"கவனி. பட்டாளத்தார்கள் என்னைக் கண்டு எள்ளி நகையாடச் செய்து விட்டாய் நீ."

"அப்படி நான் என்ன செய்து விட்டேன்?"

"உன் பொருட்டு இன்னும் நான் அலைக்கழிக்கப்பட வேண்டுமென்றுதான் என்னை இங்கு திரும்பவும் வரவழைத்திருக்கிறாய்!"

அவள் அவனை ஏற இறங்க நோக்கினாள். அவள் கண்களில் மாறாத துயரம் இருந்தது; வழிந்தோடிய நீர்மணிகள் வலை பின்னிக் கிடந்தன; கூறக் கூசிய ஆத்திரம் பொங்கியது.

"அப்படி நான் என்ன தீங்கு உங்கட்குச் செய்து விட்டேன்? ஏன் இந்தக் குற்றச்சாட்டு? உங்களிடம் சில தருணங்களில் சிலவற்றை யாசித்ததற்காகவா? உங்கள் சந்திப்பு நிகழாவிட்டால் என்னை நீங்கள் இங்கே இன்று கண்டிருக்க முடியுமா? யாராவது என்னைத் திட்டினார்களென்றால் அது உங்களைத் தவிர வேறு யாருமில்லை."

"நான் ஒன்றும் திட்டவில்லை. ஆனால் நான் உன்னைக் காண மறுபடியும் வரமுடியாது. பிரஷியர்களுடன் நீ வைத்திருந்த கெட்ட நடவடிக்கைகளைக் கண்டு நகரமே நகைக்கிறது."

விசித்தெழுந்தாள் அவள்.

"பிரஷியர்களுடன் நான் கொண்டிருந்த கெட்ட தொடர்பைக் கண்டா? ஹா...! ஆனால் அவர்கள் தாம் என்னை வலுவில் கொண்டு சென்றனர் என்பதை நான் வெளிப்படுத்தினால்! என் நிலைபற்றிக் கருதாத, அவர்களை அழியச் செய்யவேண்டுமென்ற ஒரே நோக்கமே எனக்கு இருந்தது என்பதைத் திறந்து சொன்னால்......நான் என் நோயைக் குணப்படுத்திக் கொள்ள நினைத்திருப்பின், மிக எளிதில் வெற்றி கிட்டியிருக்குமே. ஆனால் நான்தான் அவர்களை உயிருடன் வைத்துக் கொல்ல விரும்பினேன்; அப்படிச் செய்யவும் செய்தேன். ஆம்!......"

அசையாது அவன் நின்றிருந்தான்.


அறிவிப்பு

மலாயாவைச் சேர்ந்த ஈப்போ என்ற நகரில் சில ஆண்டுகள் பத்திரிகை ஆசிரியராக இருந்தவரும், திராவிட இயக்கத்தைச் சேர்ந்தவருமான தோழர் சப. இளங்கிரன் என்பவர் தற்போது இந்நாட்டில் இருக்கின்றார். அவர் தமது இருப்பிடத்தைக் கீழ்கண்ட முகவரிக்குத் தெரிவித்துக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**SINGAI DASAN**
55, JINNAH STREET,
KOOTHANALLUR P. O.
*Tanjore Dist*

"எவ்விதமானாலும் அது வெட்கம்."

"அவர்களை மடியச்செய்தது எனக்கு வெட்கமா? அந்நாளில் நீங்கள் என்னுடன் பேசும் தோரணையிலா இன்று பேசுகின்றீர்கள்? உங்கள் மார்பை அலங்கரிக்கும் வெற்றிப் பதக்கத்தின் பெருமையளவிற்கு நீங்கள் அப்படி அரியசாதனை எதுவும் செய்யவில்லை. உங்களை விட அதற்குப் பெருமை காண்பவள் நான் என்பதை நீங்கள் அறிய முடியுமா? நீங்கள் கொன்றதை விட அதிகமான பிரஷியர்களை நான் கொன்றிருக்கிறேன்."

அசையாது நின்றான் காப்டன் எபிவெண்ட். அவன் உடல் நடுங்கியது; நயனங்களுடன் உதடுகளும் சேர்ந்து துடித்தன.

உணர்ச்சி சுழித்திட மறுபடியும் இர்மா நெஞ்சை அழுத்திக் கொண்டு தொடர்ந்து பேச எத்தனித்தாள்.

"நீங்கள் பிரஷியர்களுக்கு என்ன தீங்கு செய்துவிட்டீர்கள்? அவர்களைமட்டும் ரூவனுக்கு அனுப்பாதிருந்தால் முடிவு எப்படிப் பாதிக்கப்பட்டிருக்கும், தெரியுமா? சொல்லுங்கள். உங்களைக்காட்டிலும் நானே அதிக இன்னல்கள் அவர்கட்கு விளைத்திருக்கிறேன். ஆம்; அதன் பலனாக உடலுறவு நோயால் பீடிக்கப்பட்டு நான் இதோ இறக்கும்தருவாயில் ஊசலாடுகிறேன். நீங்கள் தமாஷாகப் புதுக்கன்னிகளுடன் காதல்கீதம் இசைத்துக் காதல்கும்மாளியிடுகிறீர்கள்..."

படுக்கையில் சுருண்டுகிடந்த நோயாளிகள் ஒவ்வொருவரும் தலையைத் தூக்கிக் காப்டனைப் பார்த்தார்கள்.

"அமைதியாக இரு...மிகவும் அமைதிவேண்டும்."

"ஆம்; நீங்கள் விடுவிக்கப்பட முடியாத புதிர்பின்னல்! உங்களை நான் அறிவேன் நன்றாக. உங்களைக் காட்டிலும், உங்களது படையைவிட அதிக எண்ணிக்கையான எதிரிகளை நான் இறந்துபடச் செய்திருக்கிறேன். கவனமிருக்கட்டும்... நீர் கோழை... பயங்கொள்ளி..."

இர்மா அலறினாள்.

காப்டன் ஓடினான். நோயாளிகள் படுத்திருந்த இருமருங்குப் படுக்கைகளையும் துளைத்துக் கொண்டு விரைந்தோடினான். அப்பொழுதும் "ஆம்; உங்களைவிட நான் அதிகமான எதிரிகளைச் சாகடித்திருக்கிறேன்" என்று தீனமாக அலறிய இர்மாவின் அழுகையை, உடலுறவு நோய்க்குத் தன்னைப் பலியாக்கிக் கொண்ட அவளின் மாறுப் பெருமூச்சை அவன் காது கொடுத்துக் கேட்டான்.

நான்கு படிக்கட்டுகளை ஓரே எட்டில் தாவி மாடியிலிருந்து பாய்ந்தோடினான் காப்டன் எபிவெண்ட்.

மறுதினம் இர்மா இறந்து விட்டதாக அவன் கேள்விப் பட்டான்!

[மூலம்: மாப்பஸான்]

# 72 Persons are awarded prizes in our puzzle No. 6 (1st prize 34, 3-rd prize 28 and 5th prize 10 persons)

**Full particulars are published in the Rainbow dated *10-4-52***

ரிஜிஸ்டர் நெ. 277

# ரூ. 25,000 பரிசு

போட்டி நெ. 8

**MS Premier Bank of India Ltd**-ல் சீல் செய்துவைக்கப் பட்டுள்ள சரியான விடை அவர்கள் அங்கீகாரத்தின்பேரில் பிரசுரிக்கப்படும். முற்றிலும் சரியான விடை அனுப்புபவர் களுக்கு முதல் பரிசு ரூ. 12,000. முதல் இரண்டு வரிசை சரியான விடைக்கு இரண்டாம் பரிசு ரூ. 7000. முதல் ஒரு வரிசை சரியான விடைக்கு மூன்றும் பரிசு ரூ. 3000. முதல் மூன்று நம்பர் சரியானவிடைக்கு நான்காம் பரிசு ரூ. 2000 முதல் இரண்டு நம்பர்கள் சரியான விடைக்கு *5*-ம் பரிசு ரூ. 1000 அளிக்கப்படும். எங்கள் ஸீல் வைத்த விடைகள்படி எல்லாம் சரியாக இருக்க வேண்டும். மேற்கண்ட பரிசுகள் வசூலுக்கு தகுந்தபடி பகிர்ந்து கொடுக்கப்படும்.

**AMBAL'S PUZZLES**

KEY S. NO 6 13 TO 28-82

| | | | |
|---|---|---|---|
| 20 | 13 | 25 | 24 |
| 22 | 27 | 15 | 18 |
| 23 | 26 | 14 | 19 |
| 17 | 16 | 28 | 21 |

We hereby certify that the above is the solution in original deposited with us by Ambal's Puzzles No. 6 on 10/3/52 in a sealed cover which was opened in our presence to-day and that a copy of the above solution has been lodged with the Bank.

*For The Premier Bank of India Ltd.*
V. Ramamurthy 28/3/52
Agent, Madras

**முடிவு தேதி 28–4–52** **விடை 13–5–52**

**பிரவேசக் கட்டணம் :** கூபன் *1*-க்கு ரூ. *1-0-0* 6 கூபன் கொண்ட ஸெட் 1-க்கு ரூ. 5-0-0

**118**

| | | | |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |

விடைகள் கண்டுபிடிக்கும் விதம்:— 22 முதல் 37 வரையுள்ள எண் களைக் கொடுக்கப்பட்டிருக்கும் கட்டங்களில், மேலிருந்து கீழும், இடமிருந்து வலமும், குறுக்காகவும் எப்படிக் கூட்டினாலும் 118 வரும்படியாக அமைக்க வேண்டும். ஒரு எண்ணை ஒரே தடவைதான் உபயோகிக்க வேண்டும்.

விதிகள்:— தனி வெள்ளைக் காகிதத்தில் தேவையான கட்டணத்துடன் எத்தனை கூப்பன்கள் வேண்டுமானாலும் எழுதி அனுப்பலாம். ஒவ்வொரு கூப்பனிலும் பெயர், விலாசம், எண்கள் எல்லாம் ஆங்கிலத்தில் விளக்கமாக எழுதப்பட வேண்டும். பிரவேசக் கட்டணத்தைக் கிராஸ் செய்த போஸ்டல் ஆர்டர் மூலமாகவோ அல்லது மணியார்டர் மூலமாகவோ அனுப்பலாம். மணியார்டர் செய்த ரசீதைக் கூபன்களு டன் சேர்த்து அனுப்ப வேண்டும். வசூலுக்குத் தகுந்தபடி, பரிசு பகிர்ந்து அளிக்கப்படும். போட்டி சம்பந்தமாக மானேஜர் தீர்ப்பே முடிவானது; சட்டபூர்வமாய்க் கட்டுப்படுவது மாகும். போட்டி முடிவு **RAINBOW** மாதமிருமுறைப் பத்திரிகையில் பிரசுரிக்கப்படும், அல்லது **4** அணு ஸ்டாம்பு அனுப்பினல் விடை அனுப்பப்படும்.

கூபன்கள் அனுப்பவேண்டிய விலாசம் :—

# AMBAL PUZZLE NO. 8

**28 (14) Thandavaraya Gramani Street, Tondiarpet,** MADRAS - 21

# விளையாட்டு

நாரா நாச்சியப்பன்



நடுக்கமுறும் குரல்ஒலியில் ஓசைகூட்டி
நல்லவனும் என்பிள்ளை அழுத தாலே
படுக்கைவிட்டு நானெழுந்தேன். தூக்க மெல்லாம்
பாழான தெனவேங்கி நிமிரும் போது
அடுக்களைவிட் டவள்வந்தாள், கண்ணி ரண்டும்
அருவியென நீர்பொழியக் கண்டு—நொந்தேன்.
வெடுக்கென்று சிரித்தபடி, "புகை புகுந்து
விளையாடிற் "றென்றாள் தன் கண் துடைத்தாள்.

பகைப்பேயின் தோற்றத்தைக் கண்டு நெஞ்சில்
பயங்கொண்ட கோழையைப்போல் நடுநடுங்கித்
திகைத்துப்போய்ப் படுத்திருக்கும் சிறு குழந்தைச்
செல்வமதைப் போய்வாரி யணைத்துக்கொண்டேன்.
"தொகையாக நூறுபுலி பாயுமேனும்
துடிக்காத குடிப்பிறந்த மகனே, வாடை
மிகையாக விளையாடிப் போயிற்றே உன்
மேனியிலே" எனக்கூறி முத்த மிட்டாள்.

கைநிமிண்டச் சிவந்தவொரு கன்னத் தோடே
கள்ளவிழி விழித்தபடி கொல்லைப் பாதை
பையவந்து நுழைகின்ற பெரிய பெண்ணைப்
பார்த்துமிகக் கடிந்துரைத்தாள், "மகளே நீதான்
செய்துவரும் விளையாட்டை நிறுத்தா விட்டால்
சிரித்துவிடும் ஊரெல்லாம் அடுத்த வீட்டுப்
பையனே பெருங்குறும்பன்" என்றே! அந்தப்
பருவமகள் விளையாட்டைப் புரிந்துகொண்டேன்.





# சபலம்

கலைச்செல்வன்

டிங்-டிங்-டிங்......!

சுவரில் மாட்டியிருந்த நாழிகை வட்டில் மணி ஒன்பது அடித்து முடித்தது. அப்பொழுதுதான் எங்கேயோ வெளியில் சுற்றிவிட்டுக் களைப்புடன் வந்த டாக்டர் தினகரன் சற்று ஓய்வாகச் சாய்வுநாற்காலியில் சாய்ந்த வண்ணமாக ஏதோ ஒரு தினசரிப் பத்திரிகையைப் புரட்டிக் கொண்டிருந்தார்.

'டக்—டக்—டக்' கென்று கதவைத் தட்டும் ஓசை அவருடைய செவியில் மோத, அலுப்புடன் ஏதோ முணுமுணுத்துக் கொண்டே கதவைத் திறந்தார்.

"டாக்டர் சார், நீங்க தானே பண்ணையார் பரமசிவம் பிள்ளைக்கு 'ட்ரீட்மெண்ட்' செய்யறது?"

"ஆமாம். நீங்கள்......!"

"டாக்டர் சார் 'கேஸ்' எப்படி!"

"ஆரம்பத்தில் கொஞ்சம் 'சீரியஸ்'ஸாகத்தான் இருந்தது. இன்று காலையிலிருந்து கொஞ்சம் சௌகரியமாக இருக்கிறது"

"அப்படியானால் பரமசிவம் பிள்ளை பிழைத்துக் கொள்வார்னு சொல்லுங்கோ!"

"அது என்ன அப்படிக் கேட்கிறீங்க? இனிப் பயப்பட வேண்டிய அவசியமே இல்லை! அது சரி நீங்கள் யாரென்று சொல்லவில்லையே!"

"ஓ! மறந்து விட்டேன். மன்னிக்கவும். நான் பண்ணையாருக்கு உறவு."

"உறவு என்றால்"

"எனக்கு மாமனார் என்று வைத்துக் கொள்ளுங்களேன்."

"சரிதான், நீங்கள் இப்பொழுது பிள்ளை விஷயமாக வந்திருக்கிறீர்கள் என்று சொல்லுங்கள்."

"ஒருவகையில் அப்படித்தான்"

"அதென்ன சார் ஒருவகையில்"

"சார், இங்கே வேறு ஒருவரும் இல்லையே. உங்களிடம் ஒரு விஷயம் சொல்லவேண்டும். மிகவும் முக்கியமானது."

"என்னைத்தவிர வேறு ஒருவரும் இங்கே இப்பொழுது இல்லை. தாராளமாகச் சொல்லுங்கள்"

"டாக்டர் சார், இந்தப் பண்ணையாரைப்பற்றி உங்களுக்கு அதிகமாகத் தெரியாதென்று நினைக்கிறேன். என்ன நான் சொல்வது...!"

"சரிதான்!"

"இந்தப் பண்ணையார் இருக்கிறாரே அவருக்கு ஆண் வாரிசே கிடையாது. அவருடைய மனைவியும் சென்ற வருஷமே இறந்துவிட்டார்கள். சுமார் ஒரு லட்சத்திற்குமேல் சொத்து இருக்கிறதேதவிர, மனிதன் எச்சில் கையாலே காக்காய் ஓட்டமாட்டார். அவருக்குப் பிறகு அந்தச் சொத்துக்கெல்லாம் வாரிசு அவருடைய ஒரே பெண் மேகலை தான். அவள்தான் என் மனைவி

யாயிற்றே! டாக்டர் சார், அந்த மனிதனை நினைத்தால் எனக்கு வெறுப்பாக இருக்கிறது போங்கள். ஆபத்தில் உதவுவதுதானே மனிதத்தன்மைக்கு அழகு. அதற்கு முற்றிலும் மாறுபட்ட மகான் எனது மாமனார். அவருக்குக் கடுமையான ஜுரம் என்று ஆள் வந்து சொன்னான். நான் அதைக் கவனிக்கவேயில்லை. என் மனைவிதான் தந்தையைப் பார்க்கச் செல்லவேண்டுமென்று துடிதுடித்தாள். நேற்றுத்தான் தன்னுடைய சொத்து பூராவையும் தன் மகளுக்கு உயில் எழுதி வைத்திருக்கிறார் என்று கேள்வியுற்று வந்தேன். மனிதன் உயில் எழுதிவிட்டாரே தவிர, நாளைக்கு திடீர்னு எழுந்து நடமாட ஆரம்பித்துட்டார்னா நம்ப பாடு ஆபத்துதான். ஏனென்றால் அவர் ஒரு மாதிரியானவர். இன்றைக்கு இருப்பதுபோல் நாளைக்கு இருக்கமாட்டார். திடீர் திடீரென்று குணம் மாறும் தன்மையுடையவர். நேற்றைவரைக்கும் ஆள் பிழைப்பது அருமை என்று சொல்லக்கூடிய நிலையிலிருந்தாராம். ஆனால் இன்றைக்கு ஆள் பிழைத்துக் கொள்வார் போலிருக்கிறது! டாக்டர் சார், என்னுடைய எதிர்கால வாழ்வு உங்கள் கையிலேதான் இருக்கிறது! உங்கள் தயவு மட்டும் இப்பொழுது இருந்தால் எனக்குக் கவலையே கிடையாது. அதனாலே இதிலே எவ்வளவு இருக்கிறது பாருங்கள்" என்று கூறிக்கொண்டே நூறு ரூபாய் நோட்டுகள் அடங்கிய ஒரு கத்தையை எடுத்து அவர் டாக்டர் தினகரனிடம் நீட்டினார்.



"என்னங்க இது? என்ன சொல்லுகிறீர்கள்?" ஒன்றும் புரியாது குழம்பிய உள்ளத்துடன் கேட்டார் தினகரன்.

"அடடா! இன்னும் புரியவில்லையா? இதோ பாருங்கள். இதையெடுத்து உள்ளே வையுங்கள். மூன்று ஆயிரம் இருக்கிறது. எப்படியாவது பண்ணையாரை இந்த உலகத்தை விட்டு விடுதலை செய்துவிடுங்கள். அவ்வளவுதான். காரியம் முடிந்தவுடன் இன்னும் இரண்டாயிரம் தந்து விடுகிறேன். ஊம்; இதை எடுத்துவையுங்கள்" என்று சுற்றுமுற்றும் பார்த்துக் கொண்டு தழுதழுத்த குரலில் கூறினார் அந்த ஆசாமி.

டாக்டர் தினகரன் இந்தச் செய்தியைச் சற்றும் எதிர்பார்க்கவில்லை. இதைக் கேட்டவுடன் அவர் திடுக்கிட்டுப் போனார். அந்த ஆசாமியைப் பார்க்கவே அவருக்குப் பயமாக

வும் அருவருப்பாகவும் இருந்தது. என்ன பதில் சொல்வதென்று புரியாது பேசாமல் இருந்தார்.

"என்ன டாக்டர் திகைக்கிறீர்கள்! இந்த மாதிரி விஷயத்திற் கெல்லாம் தைரியம் வேண்டும். உலகத்தில் எத்தனேயோ பேர் கொலையையே ஒரு தொழிலாகக் கொண்டு இருக்கிறார்கள். நீங்கள் என்னமோ சாகப்போகிற கிழவனைச் சாகடிக்கப் பயப்படுறீங்க. கழுத்தை நெரித்தா அல்லது கத்தியால் வெட்டியா கொலை செய்யச் சொல்லுகிறேன். சும்மா ஒரு 'டிராப் பாய்சன்!' அவ்வளவுதான். காரியம்முடிந்து டாக்டர் சார், சொத்து மட்டும் நம் பக்கம் வரட்டும், பிறகு பாருங்களேன்.........! எடுத்து வையுங்கள்" என்றார் புன்னகையுடன் அந்த மனிதர். டாக்டர் திகைத்தார். பேசுவதற்கு அவருடைய நா எழவில்லை. வந்த ஆசாமியோ அவரை விட்ட பாடில்லை. தினகரனை எப்படியோ சரிப்படுத்தி விட்டார்.

டாக்டர் தினகரனுக்கும் இப்பொழுது நெருக்கடியான நேரம் தான். அந்த ஊரில் அவரைப் போல் இரண்டு மூன்று எம். பி. பி. எஸ். கள் போர்டை மாட்டிக் கொண்டு உட்கார்ந்துவிட்டதால் அவருக்கு வருமானம் குறைந்து விட்டது. குடும்பமோ பெரியது. இந்த நேரத்தில் வீடு தேடி ஐயாயிரம் வருகிறதென்றால் ஒப்புக்கொள்ளாமல் அவர் என்ன செய்வார். ஆசைக்கும் அச்சத்திற்குமிடையே அவர் உள்ளம்



ஊசலாடிக்கொண்டிருந்தது. 'டிங் டிங் டிங்'— மீண்டும் நாழிகை வட்டில் மணி பன்னிரண்டடித்தது. மேசையின்மீது கிடந்த பணத்தை எடுத்துத் தலையணையின் கீழ் வைத்துக் கொண்டு விளக்கை நிறுத்தி விட்டுப் படுத்துவிட்டார் டாக்டர் தினகரன். நித்திரை உலகில் எங்கேயோ சுற்றிக்கொண்டிருந்தார்.

மறுநாட் காலையில் டாக்டர் தினகரன் பண்ணையார் வீட்டிற்குச் செல்லக் கிளம்பிக்கொண்டிருந்தார். நடுங்குங் கரங்களால் விஷத்தை எடுத்து ஏதோ ஒரு மருந்துடன் கலந்தார். அதை எடுத்துக்கொண்டு காரில் உட்கார்ந்தார்.

படுக்கையில் பரமசிவம் ஏதோ உளறிக்கொண்டிருந்தார். டாக்டர் தினகரன் அவரிடம் ஒன்றும் பேசவில்லை. மருந்தைக் கொடுத்தார். அருகில் அவர் மருமகன் புன்சிரிப்புடன் அமர்ந்

திருந்தார். "மாலை வருகிறேன்" என்று கூறிவிட்டுக் காரில் ஏறினார். காரை அவரே ஓட்டிக்கொண்டுசென்றார். கார் நாற்பது மைல் வேகத்தில் போய்க்கொண்டிருந்தது. அவரை அறியாமல் அவருடைய உடல் பயத்தால் நடுங்கிக்கொண்டிருந்தது;இதயத் துடிப்பு அதிகமாகியது. நெற்றியிலே வியர்வை அரும்பியது. "கொடுத்த மருந்து வேலை செய்துகொண்டிருக்கும்; இன்னும் இரண்டுமணி நேரத்தில் ஆள் 'குளோஸ்.' பிறகு நேராக இரவு அவர் மருமகனைப் பார்க்க வேண்டும். பாக்கி ரூபாய் இரண்டாயிரத்தையும் வாங்க வேண்டும். இன்னும் ஆறு மாதத்திற்குக் கவலை இல்லை"


அருமையான கதைப் புத்தகங்கள்!

| | |
|---|---|
| நரிக்குறவன் | 0—4—0 |
| மலைத்திருடன் | 0—3—0 |
| காசிராஜா | 0—3—0 |
| மாஸ்டர் கோபாலன் | 0—3—0 |
| காளிகோயில் | 0—3—0 |
| சரவணச்சாமி | 0—3—0 |
| சதிகாரன் | 0—3—0 |
| வனராணி | 0—3—0 |

நிபந்தனைகள்: விற்பனை ஏஜண்டுகட்கு 25% கமிஷன் தரப்படும். ரூ. 5-க்கு மேற்பட்ட ஆர்டர்களுக்குத் தபாற்செலவு இலவசம். வி. பி. மூலம் அனுப்பப்படும். தனிப்பிரதி, மாதிரிப் பிரதிகள் வேண்டுவோர் புத்தக விலையுடன் தபாற்செலவும் சேர்த்து தபால் ஸ்டாம்பாகவோ, M. O. மூலமாகவோ அனுப்பிவைக்க வேண்டும்.

★

விபரங்கட்கு:

செந்தமிழ்ப் பதிப்பகம்

த. பெ. எண்: 39 கீழராஜ வீதி

புதுக்கோட்டை



என்றெல்லாம் முதலில் எண்ணிய அவரது உள்ளம் இப்பொழுது எதை எதையோ எண்ண ஆரம்பித்தது. "அநியாயமாக ஒரு உயிரைப் பணத்திற்காக கொலைசெய்த மாபாதகன்" என்று அவரைப் பார்த்து யாரோ கூறுவதுபோன்றிருந்தது. அவருடைய சிந்தனை ஆடிக்காற்றில் அகப்பட்ட இலவம் பஞ்சாகியது. ஒன்றுமே புரியவில்லை அவருக்கு.

கார் வேகமாக ஓடிக்கொண்டிருந்தது. அதே நேரத்தில் அவருடைய உள்ளம் அவர் செய்த துணிகரச் செயலுக்காக நடுங்கிக்கொண்டிருந்தது.

சுழன்றடிக்கும் சிந்தனைப் புயலில் அகப்பட்ட அவரால் ஓடிக்கொண்டிருக்கும் காரைத் தடைசெய்ய முடியவில்லை. அது தனது அபிப்பிராயத்திற்கு ஓடிக்கொண்டிருப்பது போலிருந்தது. எதிரே ஒரு மரம். ஓடிக்கொண்டிருந்த கார் அம் மரத்திற்கு முத்தம் கொடுத்தது. மறுகணம்... ஆ!... அவருடைய கார் நொறுங்கியது. "ஐயோ" என்றலறிக்கொண்டு கண் விழித்தார் தினகரன். கட்டிலிலிருந்து உருண்டு தான் தரையில் வீழ்ந்திருப்பதைக் கண்டார். உடல் நடுங்கிக்கொண்டிருந்தது. தான் கண்டது கனவு என்பதை அறிந்துக்கொள்ளக் கால்மணி நேரமாகியது அவருக்கு. மெதுவாக எழுந்திருந்து தலையணையின் கீழ் தடவிப்பார்த்தார். அங்கே பரமசிவத்தின் மருமகன் கொடுத்த

பச்சை நோட்டுகள் அப்படியே இருந்தன.

மீண்டும் படுக்கையில் போய்ப் படுத்தார். உறக்கம் வரவில்லை. சிந்தனை மேகங்கள் ஒன்றோடொன்று மோதின! எண்ணங்கள் மின்னின! கொலை செய்து விட்டதைப் போலத் துடி துடித்துக் கொண்டிருந்தது அவருடைய மனம். "கேவலம் இந்த மூன்றாயிரம் ரூபாய்க்காக ஒரு உயிரைக் கொலை செய்வதா? அந்தப் பணத்தைக் கொண்டு தானெத்தனை நாளைக்கு வாழ்ந்து விட முடியும்?"— இப்படிக் கேட்டது அவருடைய உள்ளம்.



"கொலை செய்தால் என்ன? அந்தப் பண்ணையார் பரமசிவம் எத்தனை குடும்பங்களைக் கெடுத்து அவர்கள் வாழ்வை வறண்ட பாலைவனமாக்கித் தன் வாழ்வை வளமாக்கியிருப்பார்?" என்று மற்றொரு கேள்வி எழுந்தது அதே உள்ளத்தில்.


அன்று அவருக்கு நிம்மதியே கிடையாது. இரவு முழுவதும் ஓயாத மனப்போராட்டம். அமைதி அமைதியென ஏங்கினார் அவர். கடைசியாக அவர் ஏதோ ஒரு முடிவிற்கு வந்தவராய் உறுதியுடன் தோன்றினார்.

காலைமலர்ந்ததும்முதல்வேலையாக அந்த ரூபாய்களை ஒரு கவரிலே வைத்தார். "நண்பருக்கு வணக்கம். இரவு நீங்கள் என்னிடம் கூறியது போலச் செய்ய என் மனம் இடந்தரவில்லை. எனவே தங்கள் ஆசையைப்பூர்த்திசெய்ய முடியாமைக்கு வருந்துகிறேன். மன்னிக்கவும். நீங்கள் கொடுத்துச் சென்ற மூவாயிரமும் இதிலே இருக்கிறது. எடுத்துக் கொள்ளவும். மீண்டும் இது விஷயமாக என்னைத் தொந்தரவு செய்ய வேண்டாம்" என்று ஒரு கடிதம் எழுதி அதையும் அந்தப் பையில்போட்டுக் கட்டினார். பிறகு 'ப்யூன்' கந்தசாமியை கூப்பிட்டு அந்தக் கவரைக் கொடுத்துப் பரமசிவம் பிள்ளையின் மருமகனிடம் கொடுக்குமாறு பணித்தார்.

பிறகுதான் டாக்டர் தினகரனுக்கு நிம்மதி உண்டாயிற்று. உள்ளப்புயல் ஓய்ந்தது. கந்தசாமியின் வரவிற்காகக் காத்துக் கொண்டிருந்தார். நேரம் சுழன்றோடியது!

"எசமான்" என்ற குரலுடன் கந்தசாமி உள்ளே நுழைந்தான்.

"என்னடா கொடுத்து விட்டாயா?" என்றார் பரபரப்புடன்.



**வீட்டுக்காரர்:** எப்படி வீடு, பரவாயில்லையா?

**வந்தவர்:** எல்லாம் பார்த்துவிட்டேன். 'பாத்ரூம்' மட்டும் நீ ஏன் எனக்குக் காட்டவில்லை?

---

"கொடுத்துவிட்டேனுங்க"

"ஏதாவது உன்னைக் கேட்டாரா அவர்?"

"ஒன்னும் கேட்கலீங்க. நீங்க கொடுத்ததாகக் கொடுத்துவிட்டு வந்திட்டேனுங்க."

"சரி, சரி வீட்டைப்பார்த்துக்கோ வெளியில் சென்று வருகிறேன்" என்று கூறிக் கொண்டு கிளம்பினார்.

"எசமான்" மீண்டும் அழைத்தான் கந்தசாமி.

"என்னடா கிளம்பும்போது? என்னவேண்டும்?" என்றார் டாக்டர் அலுப்புடன்.

"எசமான் நம்ப பண்ணையார் இல்லீங்க!"

"ஆமாம்"

"நீங்ககூட அடிக்கடிப் போய்ப் பார்த்துக் கொண்டிருக்கல்லே!"

"சரிதாண்டா, சீக்கிரம்சொல்லு!"

"இருந்தாற்போலே இருந்து திடீர்னு கொஞ்ச நாழிக்கு முன்னே மாரடைப்பினால் செத்து போயிட்டாருங்க" என்றான் கந்தசாமி. எதையும் கண்டு இரங்கும் ஏழையின் உள்ளம் வருந்தியது. கண்களிலிருந்து இரண்டு சொட்டு நீர் பூமியில் விழுந்தது.

அதற்கு மேல் அவன் என்ன கூறினானோ அதெல்லாம் அவர் காதில் விழவில்லை. சிலைபோல் உட்கார்ந்துவிட்டார். "அடடா! அவசரப்பட்டு அந்தப் பணத்தைக் கொடுத்துவிட்டாயே. உன்னைப்போல் ஏமாளி இருப்பார்களா?" என்று எண்ணியது அவருடைய உள்ளம்.

"ஊம், கைக்கு எட்டியது வாய்க்கு எட்டவில்லை—" ஒட்டி உலர்ந்த டாக்டர் தினகரனின் உதடுகள் இவ்வாறு லேசாக முணுமுணுத்தன.

# வேதாளத்தின் மதிப்புரைகள்

> ''நூல்களின் தராதரத்தைப்பற்றி மட்டுமே எடை போட்டுப் பார்க்கிறேன். அவைகளைக் கொண்டு என்னை அளந்து பார்க்கவேண்டாம் என்று உங்களுக்குச் சொல்லிவிட விரும்புகிறேன்.''
>
> — வேதாளம்

'**வே**தாளம்' இல்லாமல் பொழுதே போகவில்லை. பாவம்! அதற்கும் வயதேறிவிட்டது. தள்ளாடும் காலத்தில் எங்காவது கால் இடறி விழுந்து தொலைந்ததோ என்னவோ என்ற கவலை நெஞ்சைப் பிய்த்துக்கொண்டிருந்தது. மத்தியானச் சாப்பாட்டை முடித்துக்கொண்டதும், என்னுடைய அறைக்குள் நுழைந்தேன் வழக்கம்போல!

என்ன ஆச்சரியம்! முன் பின் பழக்கமில்லாத ஒரு 'உருவம்' மேசையின்மேல் குப்புறக் கவிழ்ந்துகொண்டு, எதையோ விசையுடன் எழுதிக்கொண்டிருந்த காட்சியைப் பார்த்ததும் பிரமை தட்டிவிட்டது எனக்கு!

"யார் நீங்கள்?" என்று கேட்டேன்.

"யாராக இருக்கலாம் என்று நீங்களே யூகித்துச் சொல்லுங்கள்" என்ற கேள்வி திரும்பி வந்து என்னைத் தாக்கியது.

கூர்ந்து கவனித்தேன். சந்தேகமில்லை. அது பழைய வேதாளம்தான்.

"நீயா?" என்று கேட்டேன்.

"ஆம்! நான்தான்!"

வளரும் இலக்கியம்

என்னுடைய நினைவு நிதானம் தவறாமல் ஒருமுறை சுழன்றது. வேதாளத்தைப்பற்றி 'அமரர் புதுமைப் பித்தன்' வருணித்து எழுதிய அந்த வரிகள் "அதன் பல்லும் முகமும் என்ன கோரம்! முதுகின்மேல், முதுகோடு முதுகாய்த் தோல் சிறகு ஒட்டிக்கிடந்தது. தலை சுத்த வழுக்கை; கபால ஓரத்தில் இரண்டொரு நரைத்த சடைகள்; கை கால் விரல்களில் நாட்பட வளர்ந்து பழுப்பேறிய நகங்கள்..."

இப்படி இருந்த வேதாளம் எப்படி உருமாறியது?

"நீ எப்படி மாறித் தொலைந்தாய்? முதலில் அதைச் சொல்லித்தொலை" என்று கேட்டேன்.

"ஓ! அதுவா? ஒருநாள் வேடிக்கையாகக் காட்டில் கிடந்த மூலிகை ஒன்றைப் பறித்துக் கடித்துப் பார்த்தேன்; அவ்வளவுதான். அப்புறம் உடம்பெல்லாம் ஒருதரம் வியர்த்துக் கொட்டியது. நிறம்கூட மாறிவிட்டது. சுனைத்தண்ணீரில் குனிந்து பார்த்தேன். நான்தான் 'நானா?' கேட்க வேண்டி வந்துவிட்டது." என்று சொல்லிவிட்டு ஒரு பெரிய

பையை எடுத்து என் முன்னால் வைத்தது.

"இது என்ன?"

"இதுதானே, சொல்லு கிறேன்! உட்காருங்கள்" என்று சொல்லிவிட்டு, ஒரு தரம் வெற்றிலை போட்டுக்கொண்டது. அதன் பின்பு கொஞ்சம் புகையிலையையும் சேர்த்து உள்ளே தள்ளிவிட்டுப் பேச ஆரம்பித்தது.


செங்கிஸ்கான்
எழுதியவர் : தங்கவேலர்
விலை: ரூ. 1—0—0
வெளியிட்டோர்
திராவிடன் பதிப்பகம்
வேலூர் (வ. ஆ)


"செங்கிஸ்கான் என்ற தலைப் பின் கீழ் ஆறு கட்டுரைகள் அமளிதுமளிப் படுகின்றன. முதற்கட்டுரையில் மங்கோலிய ரின் ஒரு பிரிவினரான 'யுர்ட்ஸ்' களுக்கும், மறு பிரிவைச்சார்ந்த 'மெர்க்கிட்ஸ்' களுக்கும் இடையே எழுந்த விளைவுகளைச் சரித்திரவாயிலாகக் கூறிவிட்டுப் பிறகு குதிரையின்மேல் செங் கிஸ்கானையும் அவனுடைய காதலி—'பூர்தை'யையும் ஏற்றி உட்காரச்சொல்லி ஒரு 'குளோசப்' காட்சி தருகிறார் ஆசிரியர். இரண்டாவது கட்டுரையில் 'எகிப்து' வரு கிறது. பேரழகி கிளியோபாட்ரா விலிருந்து பெண்ணுரிமைக்குப் போராடிய 'மேடம் டோரியா சாபிக் அம்மையார்' வரைப்பத் திரிகைச் செய்திகளை வைத்துக் கொண்டு 'படம்' வரைந்திருக் கிறார். மண்ணெய்மாபுரிப் பட் டணமாகிய பாரசீகத்தின் 'புகைச் சல்' ஓய்ந்தபிறகு, 'பாதவிக்கும் பாரசீகத்தை'ப் பார்த்துப் பரி தாபப்பட்டிருக்கலாம். தொழி லாளர்கள் — 'மலேரியா'வுக்குப் பலியாவது மிகவும் வருந்தத் தக்கது. 'தாய்லாந்து' தொழி லாளர்களுடைய கதியும் இப் படித்தான்-மலேரியாவுடன்-காச நோயும் சேர்ந்துகொண்டு வதைக்கிறது. புதுமையாளர் களைச் சந்தித்துப் புன்னகை புரியிலே உலாவத்தான் போகிறார்களாம் 'திபேத்'தியர் கள். கடைசிக் கட்டுரை ருஷ்ய நாட்டுப் 'பேனு வீரர்' டாஸ்டோவ்ஸ்கியின் வாழ்க் கைச் சுருள். அதைக்கண்ட துண்டமாக வெட்டி, முன்னும் பின்னுமாக ஒட்டி ஓடவிட்டிருக் கிறார். விஷயம் இவ்வளவுதான். இந்தக் கதம்பச்சாத்திற்குக் 'கட்டுரை—இலக்கியம்' என்று ஆடம்பரமாக 'ஜிகினு' வேலை செய்த பட்டியைக் காட்டியிருக்க வேண்டியதில்லை. முன்னுரையில் ஒழுங்கான முறையில் உருவா காத வெறும் எழுத்துப் பிண்டங் களே இந்நூல். இதை எழுது வதற்கு முன்பு சரித்திரக் குறிப்புகளைக் கொடுத்துவிட்டுப் பிறகு ஆசைதீர நடைக்கு அழகு தீட்டிமெருகுபோட்டிருக்கலாம். தங்கவேலரின் தமிழ்—அழகான நாடகத்தமிழ்" என்று சொன்ன பிறகு 'சடக்'கென்று வெளியே எழுந்துபோய், வெற்றிலைக்

குழம்பை உமிழ்ந்துவிட்டுப் பலமான கனைப்புச் சப்தத்துடன் நாற்காலியை இழுத்துப் போட்டுக் கொண்டு உட்கார்ந்தது. அதன் முகம் மாறிப்போய் இருந்தது.

"ஏன்? என்ன வந்து விட்டது உனக்கு?"

"எனக்குத்தானே? சொல்லுகிறேன். கேளுங்கள். எல்லாம் காசைக் கொடுத்து ஏமாந்த தோஷம்" என்று குரலை உயர்த்தியது.

---

**பாம்பும் — பாவையும்**

எழுதியவர் : 'மதிவாணன்'

**விலை எட்டு அணு**

வெளியிட்டோர் :

**வைகறை வெளியீடு**

திருப்பாதிரிப்புலியூர்.

---

'இலக்கியம்' என்றால் என்ன? அது எப்படி இருக்கும்? கறுப்பா? சிவப்பா? இரண்டும் கலந்த நிறம் கொண்டதா? என்ற 'வரிச்சுவடி'யைக் கண்ணெடுத்துக் கூடப்பார்க்கத் தெரியாத ஒரு 'வடி மதகு' கொஞ்சம் 'சாடு' விட்டிருக்கிறது இந்தப் புத்தகத்தில். முளைத்து இரண்டு 'இலையும் துளிரும்' வெடிப்பதற்கு முன்பாகவே தார் பாய்ந்த மாட்டைப்போலத் துள்ளுகிறது. அதாவது 'நுனிப்புல் மேயும் ஒரு சில குருட்டு மாடுகளின் கண் மூடி விமர்சனத்தைப்பற்றிக் கவலைப் படுபவனல்ல நான். காரணம்..?' என்று எழுதி ஒரு கேள்விக் குறியையும் கூடச் சேர்த்துக் கொண்டு விட்டது. தன்னைப் 'பிரமாத'மான இலக்கியகர்த்தாவாக எண்ணிக்கொண்டு மிரட்டியிருக்கும் இந்தப் 'பினுமி—பிஞ்சராப்போல்' (இவை அதனுடைய வார்த்தைகள் தாம்)—'பம்மாத்து'ப் பண்ணுகிறது. இந்தக் 'கன்றுக்குட்டி'யின் தும்புக் கயிற்றைப்பற்றிச் 'சிருங்காரவிலாஸ் சிட்டுக் குருவி அண்ட் சிந்தாமணி டப்பா'த் தயாரிப்பாளர் ஒருவர் பிரமாண்டமாகப் புகழ்ந்து எழுதியிருக்கிறார். அவர் 'எவன் எழுத்தாளன்?' எனப் புரிந்து கொண்ட பிறகே புகழுரையை வழங்கி இருக்கின்றாராம். இந்தக் காவியத்துக்குக் கதையும் கற்பனையும் சர்வ மட்டம். இதன் பிரசுரகர்த்தர்கள், இந்த மாதிரியான நூல்களை வெளியிடுவதை அறவே மறந்து விடுவது நலம். 'சங்கம் வைத்துத்தமிழ் வளர்த்த தமிழகத்திற்கு' முதலில் செய்த நற்பணியும் ஆகும்!" என்று சொல்லிவிட்டுப் பெரிய 'ஏப்பம்' ஒன்றை விட்டது.

"புளித்த ஏப்பம் போல இருக்கிறதே?" என்றேன்.

"இல்லை....இல்லை.....கொடுத்துத் தொலைத்த காசுகள் எல்லாவற்றிற்கும் சேர்த்து ஏப்பம் விட்டதுதான் கண்ட பலன்" என்று தன் வெளவால் போன்ற சிறகுகளை விரித்துப் படபடத்து எங்கோ அவசரமாக வெளியில் மறைந்தது.

# ஒரே ரூபாய்க்கு

## ஒரு 'வெஸ்ட் எண்ட்' ரிஸ்ட் வாட்ச்!

★ இது ஆச்சரியம்தான். ஆனால் ஏமாற்றமில்லை!

★ இன்றே எமது 'வெஸ்ட் எண்ட் பீரோ'வின் அங்கத்தினராகப் பதிவு செய்துகொண்டு ஐந்து ஜுவல்ஸும் ஐந்து வருட உத்திரவாதமும் உடைய உயர்தரமான 'வெஸ்ட் எண்ட்' ரிஸ்ட்வாட்ச் ஒன்றை அடைய முயலுங்கள்.

★ பரஸ்பரப் பாதுகாப்புக்கு மக்களிடத்தில் சகோதர மனப்பான்மையையும், நல்லெண்ணத்தையும் வளர்த்து வாழ்க்கையில் நன் நம்பிக்கையை உண்டுபண்ணி உலக சமாதான இயக்கத்தைப் பலப்படுத்த பரஸ்பர சகாயத் திட்டங்கள் பலவற்றை நிகழ்த்திவரும் எமது ஸ்தாபனத்தின் அங்கத்தினர்கள் ஒவ்வொருவருக்கும், அங்கத்தினர் எண்ணிக்கையை அதிகரிப்பதன் பேரில் ஷவாட்சுகளை இலவசமாகவே சமாதான ஞாபகார்த்தமாக வினியோகிக்கிறோம்.

★ அங்கத்தினர் பதிவுக் கட்டணம் ரூபாய் 1—0—0 தான்! இந்த ஒரு ரூபாயும்கூட அங்கத்தினருக்கே திரும்பக் கிடைத்துவிடுகிறது.

★ ஆகவே, 'அமெரிக்கன் ரிப்போட்டர்' வாசகர்கள் உள்பட ஆசிரியர், மாணவர், தொழிலாளர் மற்றுமுள்ள பொதுஜன ஊழியர்கள் அனைவரும் சமாதான நன்நோக்கம் கொண்டு, தாமதமின்றி 'வெஸ்ட் எண்ட் பீரோ' அங்கத்தினராகி, நடைமுறையில் மேலும் பல அனுகூலங்களுக்கு வகைசெய்யும் இந்தச் சந்தர்ப்பத்தை நழுவவிடாது பயன்படுத்திக்கொள்ள முந்துவது மிக மிக சிலாக்கியம்.

★

**தி வெஸ்ட் எண்ட் பீரோ**

தெங்கரைக்கோட்டை P. O. ஹரூர் S. I.

# பொழுது போக்கு

ராதா

## அந்தமான் கைதி

தன் தங்கையின் நல்வாழ்வுக்காகத் தன் வாழ்நாட்களையே அர்ப்பணித்துக்கொண்ட ஒரு தமையனின் உருக்கமான கதை இந்த 'அந்தமான் கைதி'! புராணக்கதைகளில் மக்களுக்கு மோகம் மேலோங்கியிருந்த காலத்தில், 'விதவை மணம்' போன்ற புரட்சிமிக்க கருத்துக்களைத் தன்னகத்தே கொண்டதொரு சமூக நாடகத்தை 'அந்தமான் கைதி' என்ற பெயரில் உருவாக்கித் தந்தார் திரு. கு. சா. கிருஷ்ணமூர்த்தி. நாடகக்கலைஞர்கள் டி. கே. எஸ். சகோதரர்களால் அந்நாடகம் மிகத் திறமையாக நடிக்கப்பட்டு மக்களின் பேராதரவையும், பெரும் புகழையும் அடைந்தது! அத்தகையதொரு நல்ல கதையை சில அநாவசியமான இடைச்செருகல்களால், தோல்வியின் உச்சத்தையடையும்படிச் செய்துவிட்டார்கள் ராதாகிருஷ்ணா பிலிம்ஸார். ஒரு வகையில் கூறப்போனால், 'ஓர் இரவின்' தோல்விப்பாதையிலேயே இந்த 'அந்தமான் கைதியும்' நடைபோட்டுச் செல்கின்றது என்றால் மிகையாகாது. நம்பமுடியாத சம்பவங்கள்—வெறுப்பையூட்டும் காட்சிகள்—பொறுமையைச் சோதிக்கும் நிகழ்ச்சிகள் ஆகியவைகளைக் கொண்டு 17100 அடி பிலிம் சுருளைப் பாழ்படுத்தியதைவிட, பதினாலாயிரம் அடியில் மிகக் கச்சிதமாகப் படத்தை எடுத்து, வெற்றிப்படமாக வெளியிட்டிருக்கலாம்.

லலிதா—பத்மினி நடனங்கள் பார்த்துப் பார்த்துச் சலித்துப் போனவை—புளித்துப் போனவையும்கூட. அதுவும் இப்படத்தில் கதையமைப்பையே மாற்றக்கூடிய அளவில் நடனங்கள் நீண்டுவிட்டிருக்கின்றன. வள்ளி என்னும் பாத்திரத்தை இடையில் நுழைத்திருப்பதைத் தடுத்திருக்கலாம். நாடகக் கதையில் அப்பாத்திரம் இருந்ததாகத் தெரியவில்லை. லீலா மார்க்கெட்டில் காய்கறி வாங்கிக் கொண்டு நடுரோட்டில் பாடிச்

செல்லும் காட்சி தேவையற்றது. வயது வந்த ஒரு குடும்பப்பெண் இப்படி நடுத்தெருவில் பாடிக் கொண்டு செல்லுவாளா? பகுத்தறிவுப் பிரசாரம் மின்னல் வேகத்தில் பரவிவரும் இந்நாளில் மந்திரவாதி ஒருவன் மூலம் லீலாவை மயக்கி மணம் செய்விக்கும் காட்சியும், அம் மந்திரவாதி இரு யுவதிகளை மேடையில் தோற்றுவித்து அவர்களின் நடனங்களை நீண்டநேரம் காண்பிப்பதும் நம்பக்கூடிய நிகழ்ச்சிகளா? புராணப் படமாயிருப்பின், ஏதோ போகட்டும் என்று தள்ளிவிடலாம். மக்களின் அன்றாட வாழ்க்கை நிகழ்ச்சிகள் பிரதிபலிக்கவேண்டிய சமூகப் படத்தில் இதுபோன்ற காட்சிகளைப் புகுத்திய டைரக்டர் மகானுபாவரை என்ன சொல்லி வாழ்த்துவது?

ஜமீந்தாராக நடிக்கும் சாரங்கபாணி பாத்திரத்தோடேயே ஒன்றிவிட்டாரெனலாம். மிடுக்காகப் பேசி, கனகச்சிதமாக நடித்திருக்கிறார். பொதுக் கூட்டத்தில், தலைமைதாங்கிப் பேசும் கட்டம் வெகுஜோர்! நடிப்பில் முதலிடம் சாரங்கபாணிக்குத்தான்! இதுவரை எம்.ஜி. ராமச்சந்திரனின் கத்திச் சண்டை நடிப்பையேகண்டு வந்த நாம், முற்றிலும் மாறாக, அன்பு மிகுந்த ஒரு தமையனின் பாத்திரத்தில் ராமச்சந்திரனைக் காண்கிறோம். வசனங்களைப் பொருட்செறிவுடன் பேசி, மிகத் திறமையாக நடித்திருக்கின்றார். திக்குரிசி சுகுமாரன் [illegible] தமிழ் உச்சரிப்பு கேட்கச் சகிக்கவில்லை. இவர் கதாநாயகன் வேடத்திற்கே பொருத்தமற்றவர். அதற்கேற்ற முகவெட்டோ உடலமைப்போ இவருக்குக் கிடையாது. தமிழ் நாட்டில், நடிப்புத் திறமையும், நடிப்பதற்கு ஆர்வமும் கொண்ட நல்ல அழகுள்ள நடிகர்களுக்குப் பஞ்சமா? இவரை எதற்காகத் தான் மலையாள நாட்டிலிருந்து இறக்குமதி செய்கிறார்களோ, நம் தமிழ்ப்பட முதலாளிகள் என்பதுதான் விளங்காத புதிராக இருக்கின்றது.

பி.கே. சரஸ்வதி கணீரென்று பேசி மிக நன்றாக நடிக்கின்றார். வள்ளியாகவரும் திரௌபதியின் நடிப்பு நாடக பாணியிலேயே இருக்கிறது. பாலையாவின் நடிப்பு ரொம்ப 'ஓவர்.' அதைக்கொஞ்சம் குறைத்துக்கொண்டிருக்கலாம். சிவதாணுவுக்குத் தன் நடிப்புத் திறனைக்காட்ட அதிகச் சந்தர்ப்பங்கள் இல்லை. கருப்பையாவின் நடிப்பு, அசல் சமையல்காரப் பிராமணனும் கண்டு வியக்கும்படி இருக்கிறது!

நம் தமிழ்ப்படங்களில் ஒரு முக்கிய குறை, சோகக்கட்டங்களில், பாடல்களைப் புகுத்தி நம் பொறுமையைச் சோதித்து விடுவதுதான்!

வசனங்கள் சாதாரணமாகத் தான் உள்ளன. பாடல்களும், தியேட்டரில் கேட்டு தலையாட்டுவதுடன் சரி. ஒளிப்பதிவு அவ்வளவு தரமாக இல்லை. ஒலிப்பதிவும் சுமார்தான்.

*Edited, Printed and Published by Murugu Subramanian for Ponni Ltd., at Ponni Agakam, 16, Seni Amman Koil Street, Tondiarpet. Madras-*

" தொலையில்
தெரியுதொரு
தோற்றம் "

— ஆத்மசாந்தியில் குமாரி





" ஐயையோ, எனக்குப் பயமாயிருக்கே "
— குமாரியில் துரைராஜ், சாயிராம்

Regd. No. M. 4849 PONN

373
16 MAY 52
MADRAS

விருந்து இலக்கிய வரிசையில் இதுவரை எட்டுப் புத்தகங்கள் வந்திருக்கின்றன. மலையாளம், ஆங்கிலம், வங்காளி, ஜப்பானியம், இந்தி, சீனம், ருஷியம் ஆகிய மொழிகளில் திகழும் இலக்கியச் செல்வங்கள் அவை!

பதிப்பாசிரியர்: பன்மொழிப் புலவர் **கா. அப்பாத்துரை M. A. L. T**

**இதுவரை எட்டுப் புத்தகங்கள்**
**வெளியாகி இருக்கின்றன.**

# 9

**மகாகவி பவபூதியின் சமஸ்கிருத நாடகம்**

# மாலதி-மாதவன்

15—4—52 அன்று எங்கும் கிடைக்கும்

**தனிப்பிரதி அணா 8**

எல்லாப் புத்தகங்களும் தொடர்ந்து பெற விரும்புவோர்
— 12 புத்தகங்களுக்கு ரூ. 6 அனுப்பவேண்டும் —

**விவரங்கட்கு:**

## பொன்னி லிமிடெட்,

**— சென்னை – 21 —**